402

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஹு மார்ச்சுமீ 1உ [பகுதி 2.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" யென்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

23 APR 192

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியா வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை பிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ளு மார்ச்சுமீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்திவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவரும். அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ரூ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காபி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

13 SEP 1926

யிலிருந்த கைத்துப்பாக்கியை யெடுத்து மறவசேனனுக்கும் குரூரசிங்கனுக்கும் நேராய் நீட்டிக்கொண்டு "நீங்கள் இருவரும் சட்டென்று கரங்களை மேலே தூக்குங்கள்; ஜேபியில் கரத்தை வைத்தால் கொல்லப்படுவீர்கள்" என்றான்.

அத்துஷ்டர்கள் இருவரும் திடுக்கிட்டு நின்றார்கள். அதற்குள் எதிரிலிருந்த ஆட்கள் அவர்கள் இருவர் மேலும் பாய்ந்து அவர்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள் கரங்களுக்கு விலங்கிட்டு விட்டார்கள். உடனே அவர்கள் முகம் வெளுத்து விட்டது. ஆயினும் தட்சணம் மாறிச்சிவப்பேறியது. இருவரும் கோபத்தோடு துலுக்கக் கிழவனை யுற்று நோக்கினார்கள். அதற்குள் கிழவன் நொடியில் தன் மாறு வேடங்களைக்களைந்து விட்டு ஆனந்தலிங் உருவத்தோடு நின்று "அன்னுசாமிப்பிள்ளை! நான் உம்மிடம் ஒரு நாள் வந்து பேசமுயன்றபோது நீர் என்னைக் கடிந்து கொண்டு அனுப்பி விட்டீரே, நினைவிருக்கிறதல்லவா? என்றான்.

அப்போதுதான் அத்துஷ்டனுக்குத் தான் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டது புத்தியிற் பட்டது. அங்கு நின்று கொண்டிருந்தவர்களெல்லாம் போலீஸ்காரர்களே. ஆனந்தலிங் "நான் அத்துஷ்டர்கள் வண்டி இங்குவரும் போது ஒரு வயோதிகத் துலுக்கக் குருபோல் மாறுவேடம் பூண்டு அவர்கள் வண்டியிலேயே யேறிக் கொண்டு வருவேன்; நீ தானூர் ஸ்டேஷனில் போலீஸ்காரரோடு ஆயத்தமாயிரு" என்று [illegible] வேண்டிய மாதிரியாவும் விசுவநாதனுக்குக் கூறி அவனை யனுப்பி விட்டு, தான் இடைவழியில் இறங்கிவிட்டான்.

மறவசேனன், குரூரசிங்கன், அவர்கள் கூடவிருந்த

18648

மூன்று வேலைக்காரர்கள் ஆகிய ஐவரும் அவர்கள் சாமான்க ளோடு தானூர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் சோதனை செய்யப் பட்டார்கள். மறவசேனனிடமும், குரூரசிங்கனிடமும் கைத்துப்பாக்கியும், குத்தீட்டிகளும் இருந்தன. பிறகு பெட்டிகள் சோதிக்கப் பட்டன. அப்பெட்டிகளில் இரண்டு பூட்டுகள் போடப்பட்ட ஒருபெட்டி யிருந்தது. அதன் சாவிகள் மறவசேனனிடமே யிருந்தன. அப்பெட்டியின் கொத்துச் சாவிகள் அவனிடமிருந்து எடுக்கப்பட்டபோது அவன் முகத்தில் உண்டான திகில் பொருந்திய விகாரத்தை யானந்தஸிங் குறிப்பாகக்கவனித்தான். அதன்பின் ஆனந்த ஸிங் அப்பெட்டியைத்திறந்து அதிலிருந்தவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக வெளியிலெடுத்தான். அதில் ஒரு சிறு தகரப் பெட்டியிருந்தது; இரண்டு மூன்று கடிதக் கட்டுகளிருந்தன. பெட்டியிலிருந்த உயர்ந்த விலை பெறும் சில உடைகளின் கீழ் கம்பளித்துண்டில் சுருட்டப்பட்ட ஒரு பொருள் இருந் தது. அது சுமார் இரண்டரையடி நீள மிருந்தது; அதன் ஒருபுறம் தண்டாயுதம்போல் பருமனாய் நுனி திரட்சியாக வும் மற்றபுறம் கைப்பிடி போலுமிருந்தன. பருமனாக விருந்த பக்கம் சுமார் ஆறங்குல அகலமிருக்கும்.

அதைக் கையினா லெடுத்த போதே யானந்தஸிங்கின் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அதே சம யம் மறவசேனன் முகமும், குரூரஸிங்கன் முகமும் வெளுத்து விட்டன. அவர்கள் முகங்களில் கோபம் தோன் றியது.ஆனந்தஸிங் அந்தப் பொருளை யெடுத்து ஒரு பக்கம் வைத்து விட்டுத் தகரப் பெட்டியைத் திறந்தான். அதில் மிக்க விலைமதிக்கத் தக்க நவரத்னங்களும், பாங்கியில் பணங் கட்டி யிருப்பதைப்பற்றிய பத்திரங்களும் இருந்தன. இவை களின் பட்டி விவரமாக எழுதப்பட்ட பின் கடைசியாய்

ஆனந்தலிங் கம்பளியில் சுருட்டியிருக்கும் பொருளை மெது வாய் எடுத்து மேலிருக்கும் கம்பளியைப் பிரித்தான். பிறகு அதை யதன் கைப்பிடியின் பக்கமாய்ப் பிடித்துத் தூக்கி "பலம் பொருந்திய தண்டாயுதம்; தலைப் பக்கம் பெரும் பாலும் ஈயம் இருக்கும்" என்று அதன் உச்சியை யுற்று நோக்கி "ஆம் ஆம். அப்படித்தான்" என்று கூறிக் கொண்டே அதைக்கீழே மெதுவாய் வைத்து விட்டுத் தன்னிடம் இருக்கும் பூதக் கண்ணாடியை யெடுத்து அதன் மூலமாய்ச் சற்றுநேரம் அதன் திரட்சியான பாகம் முழுமையும் நன்ருய்ப் பார்த்துவிட்டு உடனே யொரு சீலைத் துண்டை யப்பாகத்தின்மேல் சுற்றிக் கட்டிவிட்டு யாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டி அதற்கு அங்கிருந்த இன்ஸ்பெக்டர் எதிரில் அவர் முத்திரை யாலும், தன் முத்திரையாலும் அரக்கு முத்திரை போட்டு விட்டான்.

மறுநாள் காலை வண்டியில் ஆனந்தலிங்கும், விசுவநாதனும், போலீஸார் காவலோடு மறவசேனன் குளூர்சிங்கன், அவர்கள் ஆட்கள் ஆகிய யாவரையும் அழைத்துக் கொண்டு இந்திர புரி போய்ச் சேர்ந்தார்கள்.

9-வது அத்தியாயம்.

ஆவாரங்காட்டு மைதானத்தில் நடந்த கொலை சம்பந்தமாய் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் ஒருவனைச் சிறை செய்திருப்பதாகவும் இன்னும் விசேஷ சமாசாரங்கள் வெளி வருமென்று எதிர்பார்க்கப் படுகிறதென்றும் முன்னமே பத்திரிகையில் பிரசுரம் செய்யப் பட்டிருந்த சங்கதி தெரிந்ததே. இப்போது அதே பத்திரிகையில் கீழ்க்கண்ட சங்கதி பிரசுரிக்கப்பட்டிருந்தது:—

"அதி யபூர்வ சம்பவம்".

சிலவருடங்களுக்கு முன் தன் கொடுங் கோலைச் சகிக்காது தனக்கு விரோதமாகக் கிளம்பிய குடிகளிடமிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் இது காறும் அகப்படாதிருந்தவனும் மிக்க அக்கிரமஸ்தனென்றும் அனேகம் நிரபராதிகளாகிய உத்தமர்களைக் கொடுமையாகக் கொலை புரிந்த மாபாதகனென்று பிரசித்திபெற்றவனுமாகிய மறவசேனனும், அவனுடைய கொடுங் கோலுக்கு உடந்தையாகவிருந்து அவனோடு ஓடி விட்ட அவன் காரியஸ்தனாகிய குரூர சிங்கனும் நமது பிரக்யாதி பெற்ற துப்பறியும் சிங்கமாகிய ஆனந்தஸிங்கால் தானூரில் சிறை செய்யப்பட்டார்கள். இவர்களே ஆவாரங்காட்டு மைதானத்தில் நடந்த கொலையிற் சம்பந்தப் பட்டவர்களென்று கருதப்படுகிறது. முன்பு இக்கொலை சம்பந்தமாய் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் ஒருவனைக் கைது செய்ததாக நமது பத்திரிகையில் வெளியான விஷயம் இதோடு சம்பந்தப் பட்டதாகவே யிருக்கவேண்டும். இவ்வளவு சமாசாரமே தானூரிலுள்ள நமது சமசாரக் காரரால் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது. மறவசேனன் முதலியவர்கள் கப்பலேறிப் போய்விடத் துறைமுகம் சென்றபோது அவ்வுளவை யறிந்த ஆனந்தஸிங் மிக்க சாமார்த்தியமாய் அங்கு அவர்களைக் கைது செய்திருக்கவேண்டும். அன்றேல் அந்த அசாத்தியர்கள் ஒரு காலும் அகப்படமாட்டார்கள்.

ஆனந்தஸிங் நகரத்திற்கு வந்து சேர்ந்ததே முன்னே இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனுக்கு ஆளனுப்பி வரவழைத்தான். அவன் வந்ததே "ஆ! ஆனந்தசிங் இப்போது கீர்த்திக்குமேல் கீர்த்தி சம்பாதித்துக் கொண்டாய்; உன்னிடம் ஏதோ தக்க உள வகப்பட்டபடியாலேயே நீ துணிந்து அவர்களைப் பிடித்தாய்" என்றான்.

ஆனந்தஸிங்:—"நண்பனே! இப்போதேனும் நான் கூறுவதைச் சாவதானமாகக் கேள். உளவு எப்போதும் நம்மைத் தேடிவராது. நாம் அதைத் தேடிக்கொண்டு செல்லவேண்டும். அது கிடைத்தபிறகும் அதை நாம் சரியான வழியில் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்மைச் சேர்ந்ததே யாகும். எனக்ககப்பட்ட அத்தாட்சியை யொளிக்காமல் நான் உன்னை யழைத்துக் காட்டி விட்டேன். அம்மாது நம்மிருவர் முன்னும் நடந்தசங்கதிகள் யாவும் கூறினாள். அவள் மூலமாய்க் கிடைத்த வுளவை நீயலட்சியம் செய்து விட்டாய். நான் அலட்சியம் செய்யவில்லை. உண்மை தெரிந்திருக்கிறவரையில் எப்படியும் வேறு ருசுக்களும் கட்டாயம் அகப்படு மென்று அனுபவத்தால் நான் அறிவேன். அத்தகைய நெருக்கமான அத்தாட்சிகள் குற்ற வாளியைப் பிடித்தாலன்றி கிடைக்கா. திருட்டாந்தமாய் கொலையில் உபயோகப் படுத்திய கருவி. குற்றம் நடக்கையில் நேரில் கண்டிருந்தும் குற்றவாளியிடமுள்ள பீதியால் அதைவெளியிட அஞ்சி மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் சாட்சி அல்லது சாட்சிகள்—" என்றதே,

பாலகிருஷ்ணன் மிக்க வியப்படைந்து "என்ன? இதில் அத்தகைய சாட்சியங்கள் இருக்கின்றன வென்று கூறுகிறாய்? இது வியப்பே" என்றான்.

ஆனந்தஸிங் "ஒருவியப்புமில்லை. சர்வசாதாரணமே. கொஞ்சம் யோசிக்க வேண்டியதே குறை. கிருஷ்ணராஜு சிரசின் பின்புறம் ஒரு கடின மானதுந் தடிப்பானதுமான ஆயுதத்தால் அடித்துக் கொல்லப்பட்டான் என்று மரண விசாரணையில் ருசுவாயிற்றல்லவா. அத்தகை ஆயுதம் ஒன்று குற்றவாளியிடம் பெரும்பாலும் இருந்தே

தீரவேண்டும். குற்றவாளி அத்தகைய விஷயங்களில் சம்பந்தப்படும் சுபாவ முடையவனாக விருப்பதோடு முன் யோசனை யோடு உத்தேசித்துச் செய்திருக்கிற வரையில் அந்த ஆயுதம் அவனிடம் காயமாகக் கையிருப்பிலிருக்கும் ஆயுதமாகவே புலப்படுகிறதன்றோ.

இவற்றை யெல்லாம் நீ சிந்திக்காமல் விட்டதன் காரணம் நீ செய்த ஒரு தவறே யாகும். அதாவது கிடைத்த அத்தாட்சியைக் கவனித்து அதன்மேல் உன் உத்தேசத்தைச் செலுத்துவதை விட்டு, குற்றவாளி தற்காப்பிற்காகக் கொன்றதாய்க் கூறித் தப்பித்துக் கொள்வான் என்று கருதி விட்டாய். அது தான் தவறு. தற்காப்பிற்காக ஒருவனைக் கொல்வது ஒரு விஷயம். அவன் உனக்கு எத்தகைய தீங்கிழைக்கக் கருதுவாய்; நீ எண்ணினும் அவனைத் தந்திரமாய் வேறொருவர் எழுதிய கடிதத்தை யனுப்பி வரவழைத்து மறைந்திருந்து கொல்வது வேறுவிஷயம். இறந்தவன் சிரசில் பட்ட காயங்களே குற்றவாளி பின்னால் பதுங்கி யிருந்து அடித்தா னென்று நிரூபிக்கின்றன. மேலும் தற்காப்பிற்குக் கொன்றவனாயின் உடனே அதிகாரிகளிடம் சங்கதியைக் கூறிவிட்டிருக்க வேண்டும். நீ இவற்றையெல்லாம் கவனிக்கவில்லை.

இருக்கட்டும். இனி இதனாலடையத்தக்க கீர்த்தியைப்பற்றிப் பேசுவோம். இதனாலுண்டாகும் கீர்த்தியனைத்தும் உன்னுடையதே. எல்லா உளவும் நீ கண்டு பிடித்ததாகவும், கடைசியில் சிறை செய்ய மட்டும் நான் உதவியாகச் சென்றதாகவும் நான் பிரஸ்தாபித்து விட்டேன். தானூரிலிருக்கும் சமாசாரமனுப்புவோன் என்னைக் கேட்காமலே பத்திரிகைக்கு எழுதிவிட்டான். இன்றேல் என் பிரஸ்தாபமே வெளிவந்திராது" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட பாலகிருஷ்ணன் ஆனந்தஸிங்கின் உதாரகுணத்தை யறிந்து மிக்க வியப்படைந்தான்.

ஆனந்தஸிங் உலக கௌரவத்தையாவது செல்வத்தை யாவது மதிக்கிறவனல்ல. பன்முறை அவன் தான் கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்த குற்றங்களா லடையவேண்டிய கௌரவத்தை யன்னியர்க் களித்து விட்டிருக்கிறான். அவன் கண்டு பிடித்த குற்றங்களில் பணம் சம்பாதிக்கக் கருதியிருந்தால் கோடிக்கணக்காய்ச் சம்பாதித்திருக்கலாம்.

உலகில் பெரும்பாலார் அன்னியர் தங்களைப் புகழ வேண்டுமென்றும் கௌரவமாய் மதிக்க வேண்டுமென்றுமே கருதுகிறார்கள். பொருளில்லாதவன்கூட பிறர் தன்னைச் செல்வ வந்த னென்று கருதவேண்டு மென ஆசைப்படுகிறான். சிலர் செல்வந்தர்போலவே நடிக்கின்றனர். கல்வியில்லாதவன் அன்னியர் தன்னை வித்துவானெனப் புகழ வேண்டுமென்று கருதுகிறான். இந்த விஷயத்தில் சாதாரணக் கல்வி கற்றோர் என்றும் கல்லாரென்றும் வித்தியாசமில்லை. கௌரவப் பேய் ஏறக்குறைய எல்லாரையுமே பற்றிக்கொள்கிறது. உண்மை யறிவாளிமட்டும் உலகப் புகழ்ச்சியை மதிக்கமாட்டான். உலகப் புகழ்ச்சியை மதியா திருத்தலே மெய்ப்புகழ் என்றும், தான் யாவர்க்கும் சிறியோனெனக் கருதலே பெரியோன் இலக்ஷண மென்றும், சுடலையிலுள்ள அக்னியும் அசுத்தமானதாகக் கருதப்படுவது போல அநித்திய உலகிலுள்ள யாவும் அநித்தியமே யென்றும் அறிவாளி அறிவான்.

ஒருவாரங்கழித்து நீதிச் சபையில் கிருஷ்ணராஜின் கொலையைப்பற்றிய விசாரணை தொடங்கியது. கமலநாயகி முக்கிய சாட்சியாய் விசாரிக்கப்பட்டாள். அவள் முன்பு ஆனந்தசிங்கிடம் கூறியது போலவே யாவும் கூறினாள். அவள் கிருஷ்ணராஜுக்கு எழுதிய கடிதமும் நியாய ஸ்த

லத்தில் அளிக்கப்பட்டது. கிருஷ்ணராஜின் சவத்தைச் சோதனை செய்த டாக்டர் இரண்டாவது சாட்சியாக விசாரிக்கப் பட்டார். அவர் பின் வருமாறு கூறினர்:—

"நான் துரைத்தன வைத்திய சாலையில் ஒரு வைத்தியர். கிருஷ்ணராஜின் சவத்தை நான் சோதனை செய்தேன். அவன் தலையின் பிற்பக்கம் அடிக்கப்பட்டிருக்கிறன். அந்த ஆயுதம் கூரான ஆயுதமல்ல தடித்த உருண்டையான ஆயுதம். காயம் பட்டிருக்கு மாதிரியால் அது நன்கு விளங்குகிறது. அதைப்பற்றி என் நற்சாட்சி பத்திரத்தில் விவரமாய் எழுதியிருக்கிறேன்" என்றார்.

துரைத்தன வக்கீல், நியாயாதிபதியிட மிருந்த ஆயுதத்தை யெடுத்து டாக்டருக்குக் காட்டி "இதைப் பார்த்திருக்கிறீரா?" என்றார்.

டாக்டர்:—"ஆம். இது போலீஸ் கமிஷனரால் என்னிடமனுப்பப்பட்டது. இதன்மேல் மனித இரத்தமும் உரோமமும் மண்டையோட்டின் சிறு துகள்களும் இருந்தன. இந்த ஆயுதத்தினுலேயே கிருஷ்ணராஜு கொல்லப்பட்டிருக்கிறன் என்பதில் எள்ளளவு சந்தேகமு மில்லை" என்றார்.

வக்கீல்:—கிருஷ்ணராஜுக்குப் பட்டிருக்கும் காயத்தால் இவன் தன் எதிரியை யெதிர்த்து யுத்தம் செய்திருப்பான் என்று புலப்படுகிறதா?

டாக்டர்:—அவன் அப்படி யுத்தம் செய்திருக்க முடியாது. ஏனெனில் எல்லாக் காயங்களும் பின் பக்க மிருந்து அடித்ததால் உண்டானவையே. முதல் அடியிலேயே யிவன் குப்புற விழுந்து விட்டிருக்கவேண்டும். பிராணன் போன பின்பும் அடிக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் பின் பக்க அடிகளே. அடித்தவனும் பலாட்டிய

னுக விருக்கவேண்டும். இக்காரணங்களால் அவன் தன்னைக் காத்துக் கொள்ளச் சந்தர்ப்பமே யில்லை.

வக்கீல்:—இந்த ஆயுதத்தாலேயே கிருஷ்ணராஜு கொல்லப்பட்டா னென்பதற்கும் வேறேதேனும் அத்தாட்சி யுண்டா?

டாக்டர்:—ஆகா. இதில் ஒட்டிக் கொண்டிருந்த உரோமங்கள் அவன் தலையுரோமங்களே. மூன்றுவதாக மறவசேனனுடைய வேலைக்காரரில் ஒருவன் சாட்சியாக நிறுத்தப்பட்டான். அவன் வாக்குமூலம் பின்வருமாறு:—

"என்பெயர் வடிவேல். நான் இந்த நாட்டான். மூன்று மாதமாய் அண்ணுசாமிப்பிள்ளை யிடம் வேலையாளாக விருக்கிறேன். வீட்டுச் சாமான்களைச் சுத்தம் செய்வதும், வேறு ஏதேனும் வேலையிட்டால் செய்வதும் என் வேலை. கொலை நடந்ததினம் இரவு எஜமானுடைய காரியஸ்தர் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்து விலாசத்தில் கண்டபடி விசுவாச நிலயம் என்ற வீட்டிலிருக்கும் கிருஷ்ணராஜிடம் அளிக்கும்படி கூறினர். அச்சமயம் பெரிய நாயகியம்மாள் அறைக்குள் வேதனைப் படுவதுபோல் சத்தங் கேட்டது. என் மனதில் திகிலும் கலக்கமுமுண்டாய் விட்டன. ஏனெனில் வேலைக்காரருக்கெல்லாம் எப்போதும் பெரும்பயமே. என் எஜமானனும் அவருடைய காரியஸ்தருமாகிய இவர்களிடம் ஏதோ பயங்கரமான மர்மமிருக்கிறதென்று எங்களுக்குப் புலப்பட்டது. இதனால் எப்போதும் யாவருக்கும் பயமே.

நான் கடிதத்தைக் கொண்டுபோய்க் கிருஷ்ணராஜு என்பவரிடமளித்ததே அவர் முகத்திலுண்டான கலவரத்தால் நான் கொண்டுபோன கடிதத்தில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று எனக்குப் புலப்பட்டது. முன்னமே யேதோ சூது நடக்கிறதென்று எனக்குத்தெரியும். ஏனெ

னில் காரியஸ்தர் "கிருஷ்ணராஜு இக்கடிதம் யார் கொடுத்ததென்றுகேட்டால் பெரியநாயகியம்மாள் கொடுத்தாள் என்றுகூறு" என்றியம்பினர். இதனால்தான் ஏதோ மோசம் நடக்கிறதென்று எனக்குப் புலப்பட்டது. நான் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவந்தேன். என்மனம் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறதென்று கலவரத்திலிருந்தது. அதோடு வழக்கம்போல் பெரியநாயகியம்மாள் காணப்படவில்லை. எனக்குப் பின்னும் கலவரமாய்விட்டது. நான் மெதுவாய் நடக்கும் விவகாரங்களைக் கவனித்துக்கொண்டிருந்தேன். காரியதரிசியும் தான் இருக்கு மிடத்திலில்லை. அதற்குமேல் நான் மிக்க எச்சரிக்கையாய் எல்லா விடங்களையும் கவனிக்கத் தொடங்கினேன். ஒரு அறையின் சாளரத்தில் இருந்த சிறு சந்தின் மூலமாய்ப் பார்த்தபோது பெரியநாயகியம்மாள் அறைக்குள் கைகள் கட்டப்பட்டுக் கிடப்பதையும், காரியதரிசி ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்திருப்பதையும் பார்த்தேன். எனக்கிருந்த திகிலும் கலக்கமும் பின்னும் அதிகமாய் விட்டன.

சமையல் செய்பவன் நமது நாட்டானல்ல. தினம் பெரியநாயகியே யவன் கூடப்போய் எஜமானுக்கும் மற்றவர்களுக்கும் ஆகாரம் வட்டிப்பது வழக்கம். அன்று சமையல்காரனே வட்டித்தான். ஆகாரங்களை யெடுத்து வரும்படி எனக்குக் கட்டளையிட்டான். இன்று ஏதோ விசேஷம் நடக்கும் என்று என் புத்தியிற்பட்டது. யாவரும் போஜனம் செய்து முடிந்ததும் நான் எஜமானும் காரியஸ்தனும் இருக்கும் அறைகளுக்கு நேராக வெளியிலிருந்த செடிகளின் மறைவில் உட்கார்ந்து பார்த்துக்கொண் டிருந்தேன்.

சுமார் பனிரண்டுமணிக்குமேல் வீட்டிற்கு வரும் பாதைக்கு நேராக மேலேயுள்ள ஒரு சாளரத்தில் இராந்தல்

வெளிச்சம் தெரிந்தது. ஓகோ! என்னமோ விசேடம் நேரிடப்போகிறதென்று எண்ணினேன். நான் கடிதம் கொண்டுபோய்க்கொடுத்த கிருஷ்ணராஜு பெரும்பாலும் வருவானென்று நினைத்தேன். ஆனால் அதற்குமாறாக என் நெஞ்சு திடுக்கிடும்படியான சம்பவங்கள் நிகழ்ந்தன. சாளரத்தில் இராந்தல் வைக்கப்பட்ட ஐந்து நிமிடங்களுக்குள் எஜமான் தமது அறையிலிருந்து வெளிவந்து இராந்தலிருக்கும் சாளரத்தைப் பார்த்துவிட்டுத் துரிதமாய்த் திரும்பி யுள்ளே சென்றார். நான் மிகச் சுறுசுறுப்போடு கவனித்துக் கொண்டிருந்தேன்.

உள்ளே சென்ற எஜமான் இரண்டு நிமிடங்களுக்குள் படுக்கையுடுப்போடு திரும்பி வெளியில் வந்து நாற்புறங்களிலும் பார்த்துவிட்டு வீட்டிற்கு வரும் பாதைவழியே நடந்தார். அப்போது அவர் கையில் ஒரு தண்டாயுதம் போன்றது இருந்தது. அதைக்கண்டதால் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது. அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலில் மயிரிழை பிசகின் நமது பிராணனுக்கே யாபத்துவரும் என்பதைமறந்து என் எஜமானைத் தொடர்ந்து சென்றேன். என்னால் கூடியவரையில் பாதையின் பக்கங்களிலிருந்த செடிகளில் மறைந்து சென்றேன்.

கடைசியில் இருவரும் ஆவாரங்காட்டு மைதானத்தை நெருங்கினோம். அங்கு செடிகள் அடர்த்தியா யிருந்தன. அந்த விடத்தில் எஜமான் ஒரு அடர்ந்தபுதரில் மறைந்து கொண்டார். அவர் அப்புதரில் உட்கார்ந்து கொண்டார் என்று உணர்ந்து நானும் உட்கார்ந்தபடி மெதுவாய் நகர்ந்து கூடியவரையில் அவருக்குச் சுமார் பத்தடி தூரத்தில் போய் பேசாமல் உட்கார்ந்து கவனித்துக்கொண் டிருந்தேன். சுமார் பத்து நிமிடம் வரையில் இருவரும் அங்கேயே யிருந்தோம். அப்போது எனக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது.

முன்னே சென்று வரும் ஆளுக்கு எச்சரிக்கை செய்வதே சரி என்று தீர்மானித்துக்கொண்டேன். அதற்காக முன்னே இருக்கும் எஜமானுக்குத் தெரியாமல் அவனைக் கடந்து பாதையில் எப்படிபோய்ச் சேரலாம் என்று சிந்தித்துப் பாதை செல்லும் வழியைக் கவனிக்கச் சற்று நிமிர்ந்து தலையைத் தூக்கிப் பார்த்தேன்.

அதேசமயம் எஜமான் இருக்கும் இடத்திற்கு நேராய்ப் பாதையில் ஒரு ஆள் வருவதைக்கண்டேன். திடீலென்று இவ்வாறு நேரவே எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அப்புறம் நடந்தவிஷயம் நொடியில் நடந்து விட்டது. வந்தவன் எஜமானிருக்கும் இடத்தைக் கடந்து ஐந்தாறடி தூரம்கூடச் சென்றிருக்கமாட்டான். அதற்குள் எஜமான் பூனைபோல் அவன் பின்னால் வந்து தன் கையிலிருந்த ஆயுதத்தால் ஓங்கி அவன் தலைமேலடித்தான். அம்மனிதன் மிக்க தாழ்ந்த குரலாய் ஓ என்று சத்தமிட்டதும் குப்புற விழுந்து விட்டான். அடித்த சண்டாளன் பின்னும் ஐந்தாறு முறையடித்துவிட்டு உருமிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.

கால்மணி நேரம் வரையில் என் புத்தி சுயாதீனத்திற்கு வாவில்லை. அதன்பின் மெதுவாய் எழுந்து போய் அந்த ஆள் யாரென்று பார்த்தேன். நான் உத்தேசித்தபடி நான் கடிதம் கொண்டுபோய்க் கொடுத்த கிருஷ்ணராஜே. அதுமுதல் இச்சங்கதியைப் பெரியநாயகி யம்மாளிடம் கூறலாமென்று பார்த்தேன். அந்தம்மாளைக் காணமுடியவில்லை. அதோடு அன்றுமுதல் எஜமான் காரியதரிசி யிருவரும் எங்கள்மேல் கண்வைத்திருப்பதாகத் தெரிந்தது" என்றான்.

மறவசேனன் மேலும் காரியதரிசியின் மேலும் இக் கொலைக்குற்றமன்றி கமலநாயகியை அக்கிரமமாகச் சிறை

வைத்ததாகவும் குரூரமாய்க் கத்தியால் குத்தி இம்சித்த தாகவும் வேறு இரண்டு பிரிவுகளின்படி குற்றமும் சாட்டப் பட்டது.

குற்றவாளிகள் குற்றம் செய்யவில்லையென்றுமட்டும் கூறினார்களேயன்றி அவர்களுக்குச் சாட்சிகூற ஒருவரும் வரவில்லை.

யாவும் விசாரித்தபின் நியாயாதிபதிகள் ஜூரர்களின் அபிப்பிராயத்தைக் கேட்க அவர்கள் ஒரேமனதாய் எல்லா வற்றிலும் இவர்கள் குற்றவாளிகளேயென்று கூறிவிட்டார் கள். அதன்மேல் இருவருக்கும் தூக்குத்தண்டனை விதிக் கப்பட்டது. குற்றவாளிகளின் கையிலிருந்த சொத்தும் பாங்கியிலிருந்ததும் யாவும் சேர்ந்து மொத்தம் மூன்று கோடிக்குமேலிருந்தது. அவற்றில் மூன்றில் ஒருபாகம் கமலநாயகிக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் மற்ற இரண்டுபாகங்களில் ஒருபாகம் மறவசேனன்புத்திரிகளுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் மற்ற ஒருபாகத்தை இத் துஷ்டனால் துன்புறுத்தப்பட்டவர்களுக்குப் பகிர்ந்தளிக் கும்படி தற்சமயம் வேடபுரியை யாசாளும் துரைத்தனத் தாருக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் தீர்ப்புசெய்யப் பட்டது.

மிக்க கஷ்ட ஜீவனம் செய்துகொண்டிருந்த கமல நாயகி தனக்குத் திரண்ட செல்வம் கிடைக்கும்படிசெய்த ஆனந்தஸிங்குக்கும் இலட்சம்பவுன் அளித்து அதையெடுத் துக்கொள்ளும்படி அவனைக் கட்டாயப்படுத்தினாள். ஆனந்த ஸிங்கோ அதில் கால்பாகத்தை விசுவநாதருக்கும் மிச்சத் தைத் தருமத்திற்கும் கொடுத்துவிட்டான்.

ஆனந்தஸிங் புகழ்ச்சியை விரும்பவில்லை யெனினும் அவன் புகழ்ச்சி பின்னும் பன்மடங்கதிகரித்தது. சுந்தரம் பிள்ளை கேட்டுக்கொண்டபடி அவரைச் சாட்சியாய்ப்

போடாமல் விட்டு விட்டான். அவர் சாட்சியம் அவ்வள வாக அவசியமானதாகவும் இருக்கவில்லை. கமலநாயகிக்குக் கிருஷ்ணராஜிடமிருந்த வேலையாட்கள் தெரியுமாதலால் அவள் அவர்களுக்குத் திருப்தியான பொருளளித்து அவர் கள் ஜன்ம தேசத்திற்குப்போய்ச் சேரும்படி யனுப்பி விட் டாள். அவள் மரணபரியந்தம் ஆனந்தஸிங்கிடம் நன்றி பாராட்டுவதை மறந்தவளல்ல. ஆனந்தஸிங் இவ்விஷயத் தில் தனக்கு உதவிசெய்த வரதப்பனுக்கும் சுப்புக்கும் இனி யவர்கள் ஜீவனோபாயத்திற்குப் போதுமான பரபத்திய மளித்து அவர்கள் ஆனந்தமடையும்படிச் செய்தான்.

அட்டைப்பெட்டியின் அதிசயம்.

1-வது அத்தியாயம்

நமது ஆனந்தசிங்கன் வாசஸ்தலம் ரொட்டிக் கிடங்கு வீதியில் என்று முன்னமே கூறியிருக்கிறோம். உஷ் ணமான ஒரு நாள் ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் அறை யில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வெயிலின் அனல் தீக்ஷணியமாய் வீசுகிறதால் திரைகள் எல்லாம் விடப்பட் டிருந்தன. ஆனந்தஸிங் ஸோபாவில் சாய்ந்து கொண்டு அன்று காலை தபாலில் வந்த கடிதத்தை மறுபடி மறுபடி வாசித்துக் கொண்டிருந்தான். விசுவநாதன் காலைவந்த பத் திரிகையைப் பார்த்து அதில் மனதைக் கவரத்தக்க சமா சாரம் ஒன்றும் இல்லாததால் அதை மேஜைமே லெறிந்து விட்டான். நகரஜனங்களில் பெரும் பாலார் நாட்டுப்புறங் களில் குளிர்ச்சியான இடங்களுக்குச் சென்றார்கள். ஆனந்தஸிங்குக்கு ஏதேனும் ஒரு குற்றம் அகப்பட்டால் அறையில் உட்கார்ந்து அதைப்பற்றி சிந்திப்பதே திருப்தி

யான வேலை. இயற்கை அழகு முதலிய வெளித் தோற்றங்கள் அவன் மனதைக் கவர்வதில்லை.

விசுவநாதன் பத்திரிகையை யெறிந்து விட்டபின் எதைப்பற்றியோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். ஆனந்தஸிங் திடீரென்று "விசுவநாதம் நீ நினைப்பது சரிதான். விவாதத்தை யொழிப்பதற்கு அது மிக்க தவறான வழியே" என்றான். அவன் கூறியது விசுவநாதன் சிந்தனைக்கு ஒத்திருந்ததால் நமது மனதிலிருப்பதை யிவன் எப்படி யறிந்து கொண்டான் என்று விசுவநாதன் மிக்க வியப்படைந்து "இதென்ன இது எனக்குத் தெரிந்த எல்லாவற்றிலும் மிக்க ஆச்சரியமானதா யிருக்கிறதே" என்றான்.

ஆனந்தஸிங் ஒருசமயம் நீ கூறியது நினைவிருக்கிறதா. ஒரு மனிதனுடைய முகத்திலுண்டாகும் மாறுதல்களையும் பார்வை செய்கை முதலியவைகளையும் கவனித்தால் அவன் மனதிலுள்ள சிந்தனையைக் கூறலாம் என்று சொன்னதை நீ நம்பவில்லை யல்லவா; அதைப் பிரத்தியட்சமாய் நிரூபிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது அதற்குச் சமயம் கிடைத்தது. இப்போது நான் கூறியது கடைசியாக உன்மனதில் உதித்த சிந்தனை.

விசுவநாதன்:—இதுவரையில் நீ கூறியது உண்மையே. ஆனால் நீ யப்போது ஒரு மனிதனுடைய செய்கைகளைப் பார்த்து அறியலாம் என்று கூறினை. இப்போது நான் பேசாமல் உட்கார்ந்திருந்தேனே யன்றி இருந்த விடத்தை விட்டெழுந்திருக்கவு மில்லை. ஒன்றும் செய்யவுமில்லை.

ஆனந்தஸிங்:—அப்படியில்லை. நீ யொரேவிடத்தில் இருந்தாலும் உன் கண்கள், முகம், கரங்கள் யாவும் அப்போதைக்கப்போது உன் உள் எண்ணங்களையும் மன உணர்ச்சிகளையும் நன்றாக வெளியிட்டுக் கொண்டிருந்

தன. உனக்கு உன் சிந்தனை படிப்படியாய் எவ்வாறு சென்றதென்பது நினைவிருக்கிறதா?

விசுவநாதன்.—இல்லை. அப்படியாயின் நீ என் சிந்தனைகளை வரிசையாகத் தொடர்ந்து கவனித்தாயோ?

ஆனந்தஸிங்.—ஆம். ஆம். உன்னையறியாமல் மனம் உன்னைச் சிந்தனையில் இழுத்துச் சென்றது. நீ யதைக் கவனிக்கவில்லை. மனதின் போக்கை நீ கவனித்தால் அது தடைப்பட்டு விடும். வெளி விஷயங்களில் மனம் செல்வதற்கு கண்களே முக்கிய வாயில்கள். நீ பத்திரிகையை யெறிந்துவிட்டு இரண்டொரு விநாடிகள் சிந்தனை யற்றிருந்தாய். அப்போது உன் மனம் சூனியமாக விருந்தது. அதன் பிறகு நிமிர்ந்து சுவரை நோக்கினாய். உன் திருஷ்டி சுவரில் தொங்கும் சித்திரசேனன் படத்தின்மேல் வீழ்ந்தது. உடனே அவன் உள் நாட்டுச் சண்டையில் செய்தகாரியங்கள் உன் நினைவிற்குவந்தன. அவனுடைய வீரதீர சாமார்த்தியங்களை நினைத்ததும் உன் முகத்தில் மகிழ்ச்சியும் வியப்பும் உண்டாயின. அதற்குள் மறுபக்கம் அவன் படத்திற்கு நேராகவிருந்த அமலநாதன் படத்தைப் பார்த்தாய். உடனே சித்திரசேனன் கிழக்குத்தீவில் செய்த அக்கிரமங்களும் அமலநாதன் மிக்க சாமார்த்தியத்தோடு சென்று அவனை யங்கிருந்து துறத்தியதும் உன் நினைவிற்கு வந்தன. சித்திரசேனனை நினைக்கும் எவர் மனதிற்கும் அவன் கிழக்குத் தீவில் செய்த அக்கிரமங்கள் நினைவிற்கு வாராமற்போகா.

அதன்பிறகு அந்த உள்நாட்டு சண்டையின் கோரங்களும், அநீதமாய் சகோதரர்கள் போன்ற ஒரே ஜனங்கள் ஒருவரை யொருவர் வெட்டிக்கொண்டு மடிந்ததுமாகிய யாவும் உன் நினைவிற்கு வந்தன. நீ யந்த யுத்தத்தில் நேரில்

இருப்பதுபோல் பாவனைசெய்து கொண்டாய். உன் விரல்களை நெறித்தாய். உன் உதடுகள் துடித்தன. அதன்பின்பே அதில் உண்டான இரத்தப்போக்கையும் உயிர்ச்சேதத்தையும் நினைத்து வாட்டமடைந்தாய். கடைசியில் அடடா இச்சச்சரவை ஒழுங்குசெய்ய முயன்றவர்கள் மிக்க தவருன வழியில் பிரவேசித்ததால்தான் இத்தனை விபரீதங்கள் நடந்தன என்று கருதினுய்" என்ருன்.

விசுவ:--ஆ! நீ என் சிந்தனையைத் தொடர்ந்துவந்தது மிக்க ஆச்சரியமே. இப்போது நீ கூறியதைக் கேட்டு எனக்கு என்றுமடையாத வியப்புண்டாயிற்று.

ஆனந்தலிங் "இதில் அவ்வளவாக அதிசயம் ஒன்றுமில்லை. மேல் விஷயங்களை நன்ருய்க் கவனித்துப் பழகவேண்டும். இருக்கட்டும் பத்திரிகையைப் பார்த்தாயே. கோரைக்காடு, குருக்கு வீதியிலிருக்கும் குசலாம்பாள் என்ற மாதுக்கு ஓர் அட்டைப்பெட்டியில் அதிசயமான பொருள்கள் வந்ததைப்பற்றிய சமாசாரத்தைக் கண்டாயா?" என்ருன்.

விசுவ:—இல்லை யில்லை.

ஆனந்தலிங் "அப்படியாயின் நீ அதைப் பார்க்கத் தவறிவிட்டாய். எதோ அப்பத்திரிகையை யெடு" என்று விசுவநாதன் அதை யெடுத்துக் கொடுத்ததும் "இதோ இந்தப் பக்கத்தில் நான்காவது பத்தியின் தலைப்பில் பார். தயவு செய்து கெட்டியாகவே வாசி பார்ப்போம்" என்று பத்திரிகையை யவனிடமே யளித்தான்.

விசுவநாதன் பததிரிகையிலுள்ள சமாசாரத்தைப் பின் வருமாறு வாசித்தான்:—

ஓர் அகோரமான சிப்பம்.

"கோரைக்காடு என்ற விடத்தில் குருக்கு வீதியில் வசிக்கும் குசலாம்பாள் என்ற மாதுக்கு தபால் மூலமாய்

ஒரு சிப்பம் வந்தது. அத்தகைய கோசத்தை யாரோ துஷ்டர்கள் ஒரு வேடிக்கையாய்க்கருதி யனுப்பியிருக்க வேண்டும். இன்றேல் அதில் ஏதோ மிக்க ஆழ்ந்தகருத்திருக்க வேண்டும். நேற்று பிற்பகல் இரண்டு மணிக்குமேலே கடிதம் சுற்றிக்கட்டப்பட்ட ஒரு சிறு சிப்பத்தைத் தபால்காரன் கொண்டுவந்து அம்மாதிடமளித்தான். மேலுள்ள கடிதத்தைப் பிரித்தபோது உள்ளே ஒரு கடித அட்டைப்பெட்டி யிருந்தது. அதைத் திறந்தபோது அதில் நிறைய மட்டத்தரமான உப்பு இருந்தது. அதைக் கீழே கொட்டிய போது அதில் மனிதர்களின் இரண்டு செவிகளிருந்தன. அவை யப்போதுதான் அறுக்கப்பட்டவை போலிருந்தன.

அப்பெட்டி முன்னாள் பாலாபுரம் தபாலாபீசில் கொடுக்கப்பட்டு அங்கிருந்து வந்தது. அச்சிப்பத்தின்மேல் அதை யனுப்பியவர்களின் பெயர் முதலியன ஒன்றுமேயில்லை. குசலாம்பாள் சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட வயதுடையவள். இன்னும் மணமாகாதவள். அவள் தனியாய் வாசம் செய்பவள். அவளுக்கு சிநேகிதராவது அறிமுகமானவர்களாவது கிடையாது. அத்தகைய மாதுக்கு இத்தகைய சிப்பம் வந்தது மிக்க வியப்பை யுண்டாக்குகின்றது. சில வருடங்களுக்குமுன் குசலாம்பாள் பொன்னணையென்ற நகரில் வசித்துக்கொண்டிருந்தாள். அங்கு ஒரு வைத்திய கலாசாலையிருக்கிறது. குசலாம்பாள் அப்போது அக்கலாசாலையில் வயித்தியசாத்திரம் பயிலும் மாணவர்கள் இரண்டொருவர்க்கு மாதச் சம்பளத்திற்கு போசனம் அளித்துக்கொண்டிருந்தாள். அம்மாணவர்கள் என்னேரமும் வீட்டில் பெரிய கோஷ்டமிட்டுக்கொண்டும், சிற்றின்பப் பாட்டுகளைப் பாடிக்கொண்டும் அமக்களம் செய்துகொண்டு மிருந்தார்கள். அவள் என்ன சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. ஆகையால் அம்மாது அவர்களைப் பலவந்தமாய்த் தன்வீட்டினின்

றும் அப்புறப்படுத்திவிட்டாள். அம்மாணவர்கள் அவள் மேல் குரோதங்கொண்டு வஞ்சந் தீர்த்துக்கொள்ளக்கருதி யிப்படிச்செய்திருப்பார்கள் என்று உத்தேசிக்கப்படுகிறது. சவங்களை யறுத்துப் பழகும் அவர்களுக்குச் செவிகள் அகப் படுவது சுலபம். மேலும் அம்மாணவர்களில் ஒருவன் பாலா புரவாசியென்று கருதப்படுகிறது. போலீஸார் இது அம் மாணவர்கள் செய்த வேலையேயென்று கருதுகிறார்கள். இதற்கிடையில் துப்பறியும் இன்ஸ்பெக்டராகிய இலக்ஷ் மணஸிங் இதன் உண்மையைக் கண்டறிய முயல்கிறார்".

விசுவநாதன் இதை வாசித்து முடிந்ததும் ஆனந்த ஸிங் "சரி பத்திரிகை சமாசாரம் இவ்வளவிலிருக்கிறது. இனி இலக்ஷ்மணஸிங் என்ன கூறுகிறான் பார்ப்போம். அவ னிடமிருந்து காலையில் ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதோ அதை வாசிக்கிறேன்" என்று பின் வருமாறு வாசித் தான்:—

"அன்பார்ந்த நண்பர்க்கு எழுதிக்கொண்டது, கோணக் காடு குறுக்குவீதியிலுள்ள குசலாம்பாள் என்ற மாதுக்கு மனிதர் காதுகள் இரண்டு உப்பிலபோட்டு ஒரு அட்டைப் பெட்டியில் வைத்தனுப்பப்பட்ட விஷயத்தைப்பற்றி பத் திரிகையில் வாசித்திருப்பீர். இது தங்கள் ஆராய்ச்சிக்குத் தகுதியான விஷயம் என்று புலப்படுகிறது. இதன் உண் மையை யெப்படியேனும் கண்டுபிடிப்போம் என்ற நம் பிக்கை யென்னமோ விருக்கிறது. ஆனால் எதை அஸ்தி வாரமாய்ப் பிடித்து வேலைசெய்வது என்பதை அறிவது தான் கஷ்டமாகவிருக்கிறது. பாலாபுரம் தபாலாபீசுக்குத் தந்தி கொடுத்தோம். நேற்று ஏராளமான சிப்பங்கள் அவர் களால் அனுப்பப்பட்டபடியால் இந்தச் சிப்பம் எதுவென்று அறியவாவது இதைக் கொண்டுவந்து கொடுத்தது யாரென்று கூறவாவது முடியாதென்று தெரிவித்துவிட்

டார்கள். அப்பெட்டி ஜாவாபுகையிலை வரும் அரை இராத்தல்பெட்டி. பெட்டியாலொரு உளவும் கண்டறியக்கூடவில்லை. வைத்தியகலாசாலை மாணவர்கள் இதைச் செய்தார்கள் என்பதே யுண்மையாயிருக்குமென்று இன்னமும் புலப்படுகிறது. ஆயினும் நீ தயவுசெய்து இரண்டொருமணி நேரம் எனக்காகச் செலவழிக்கக் கூடுமாயின் நான் மிக்க வந்தனமுடையவனு யிருப்பேன். நான் என் வீட்டில் அல்லது போலீஸ் ஸ்டேஷனில்தான் நாள் முழுமையும் இருப்பேன்."

ஆனந்தஸிங் இதை வாசித்தபின் "என்ன சொல்கிருய் விசுவநாதம்? சந்தர்ப்பத்தை யனுசரித்து என்னேடுகூட கோரைக்காட்டுக்கு வருகிருயா?" என்ருன்.

விசுவ:—நான் ஏதேனும் வேலைவருமாவென்றே யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்ருன்.

ஆனந்:—"சரி அப்படியாயின் ஆளைக் கூப்பிட்டு ஒரு வண்டி கொண்டு வாச்சொல். நான் என் சட்டையை மாற்றிக்கொண்டு சுங்கானுக்குப் புகையிலை யெடுத்துக்கொண்டு வருகிறேன்" என்ருன்.

கால்மணி நேரத்திற்குள் இருவரும் வண்டியேறி போலீஸ்டேஷனுக்குச் சென்ருர்கள். இலக்ஷ்மணஸிங் இவர்களைக் கண்டதும் மிக்க ஆவலோடெழுந்துவந்து இருவர் கரங்களையும்பற்றிக் குலுக்கி அவர்கள் உட்கார்ந்ததும் "பத்திரிகையைப் பார்த்தீர்களல்லவா? என்ன உத்தேசிக்கிறீர்கள்" என்ருன். ஆனந்தஸிங் இப்போது ஒரு உத்தேசமும் வேண்டாம். நாம் உடனே புறப்பட்டு கோரைக்காட்டுக்குச் செல்ல வேண்டும்." என்ருன்.

உடனே மூவரும் இரயிலேறி கோரைக்காட்டுக்குப் புறப்பட்டார்கள். சொல்பமாய் மழை பெய்ததால் உஷ்ணம் சற்று தணிந்திருந்தது. கோரைக்காட்டு ஸ்டேஷனிலிருந்து

ஐந்து நிமிடங்களில் குசலாம்பாள் வசிக்கும் வீதிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அந்த வீதி ஒரு நீளமான வீதி இரு புறங்களிலும் இரண்டடுக்கு மாடிகளை யுடையது.

வீதியின் மத்தியில் சென்றதும் ஒரு வீட்டின் முன் நின்று கதவைத் தட்டினான். உடனே ஒரு சிறு வேலைக் காரப் பெண் வந்து கதவைத் திறந்தாள். வீட்டின் முன்ன றையில் குசலாம்பாள் உட்கார்ந்து ஏதோ தையல் வேலை செய்து கொண்டிருந்தாள். இலக்ஷ்மணஸிங் உள்ளே சென் றதும், அவள் அவன் வந்த காரியத்தை யறிந்து கொண்டு "அய்யா அது வெளி வீட்டிலிருக்கிறது. அக்கோரமான வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு போய்விடும்" என்றாள்.

இலக்ஷ்மணஸிங்:—"அப்படித்தான் செய்யப்போகிறேன். எனது நண்பர் ஆனந்தஸிங் வந்து உமது முன்னிலை யில் அவற்றைப் பார்க்கவேண்டு மென்பதற்காகவே இங்கு வைத்திருந்தேன்" என்றான்.

குசலாம்:-ஏன் அய்யா என்னெதிரில் அவர் பார்க்கவேணும்?

இலக்ஷ்மண:—அவர் தம்மை யேதேனும் கேள்விகள் கேட்கவேண்டியிருந்தால்.

குசலாம்:—"எனக்கு அதைப்பற்றி யொன்றுமே தெரியா தென்று நான் முன்னமே கூறியிருக்கையில் என்னைக் கேள்விகள் கேட்பதில் என்ன பிரயோசனம்?" என் றாள்.

18648 சென்னை-600 008

ஆனந்த:—ஆம் அம்மா இதைப்பற்றி முன்னமே யுமது மனம் மிக்க வேதனையடைந்திருக்கிற தென்று ஐய மின்றி யெனக்குப் புலப்படுகிறது.

குசலாம்பாள்:—ஆம், உண்மையே. என் மனம மிக்க வேதனை யடைந்திருக்கிறது. நான் என் வரையில் எந்த விஷயத்திலும் பிரவேசிக்காமல் எவ்வளவோ அடக்கமாய்க் காலங்கழிப்பவள், என் பெயரைப் பத்

திரிகைகளில் காண்பதும் என் வீட்டிற்குப் போலீஸார் வருவதும் எனக்கு மிக்க நவீனமான சம்பவங்கள். அய்யா அக்கோரமான சாமான் என் அறைக்குள் வர வேண்டாம். உங்களுக்கு அதைப்பார்க்க விருப்ப மாயின் நீங்கள் வெளிவீட்டிற்குச் சென்று அங்கே யதைப் பாருங்கள். வீட்டின் பின்னால் ஒரு நெருக்க மான தோட்ட மிருந்தது. அதில் தான் வெளி வீடிருந்து. இலக்ஷ்மணஸிங் அந்த வீட்டிற்குள் சென்று அச்சிப்பதத்தை யெடுத்து வந்தான். அவ் வீட்டிற்குச் செல்லும் பாதையின் கோடியில் ஒரு பலகை யாசனம் இருந்தது. இலக்ஷ்மணஸிங் ஆனந்த ஸிங்கை யதன்மேல் உட்காரச்சொல்லி அச்சிப்பத்தை யவன் முன் வைத்தான்.

இலக்ஷ்மணஸிங்கும் விசுவநாதனும் பலகைமேல் உட்கார்ந்து ஆனந்தஸிங் அச்சிப்பத்தைச் சோதிப்பதைப் பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். ஆனந்தஸிங் அப்பெட்டியின்மேல் சுற்றியிருந்த கடிதங்களேயும் மேலே கட்டியிருந்த கயிறையும் நன்றாய் உற்று நோக்கியபின் அவற்றைக் கீழே வைத்து விட்டு "இக்கயிறு மிக்க அபூர்வமானது." என்று அதைத் தூக்கிக்காட்டி, "இலக்ஷ்மணஸிங்! நீ இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான். இலக்ஷ்மணஸிங் "இக் கயிற்றில் தார் பூசப்பட்டிருக்கிறது" என்றான்.

ஆனந்த:—ஆம் இது தார்பூசப்பட்ட டேரியினே. அதோடு குசலாம்பாள் இக்கயிற்றை இரண்டிடத்தில் கத்தரித்திருக்கிறதையும் நீ கவனித்திருப்பாய் என்று கருதுகிறேன். இதில் ஒரு விசேஷமிருக்கிறது" என்றான்.

இலக்ஷ்:—எனக்கு ஒரு விசேஷமும் புலப்படவில்லே.

ஆனந்தஸிங்:—இதில் விசேஷம் என்ன வெனில் இதிலிருக்கும் முடி பழுதின்றி விடப்பட்டிருக்கிறது. இம்முடியி

லேயே ஒரு விசேஷமிருக்கின்றது. இது சாதாரண மாய் எல்லாரும் போடுகிறமுடியா பார்!

இலக்ஷ்:—முடி சுத்தமாய் இருக்கிறது. நான் முன்னமே இதைக் குறித்துக்கொண் டிருக்கிறேன்.

ஆனந்த:—சரி கயிற்றைப்பற்றிய விசேஷம் இவ்வளவே. இனி பெட்டியைப் பார்ப்போம். பழுப்பு நிறமான கடிதம் காப்பிமணம் இருக்கிறது.

இலக்ஷ்:—நான் அதைக் கவனிக்கவில்லை.

ஆனந்த:—"என்ன? கவனிக்கவில்லையா? சந்தேகமின்றி நன்ருய் மணம் வருகிறது. விலாசம் அச்சு எழுத்துக்களால் எழுதப்பட் டிருக்கிறது. எழுத்துக்கள் வரிசையாயிராமல் சிதறுண்டிருக்கின்றன. 'கோரைக்காடு' என்ற வார்த்தையைத் தவருக எழுத்துக்கூட்டிப் பிறகு திருத்தியிருக்கிருன். எழுதியவன் ஆடவனேயென்று எழுத்தினுல் தெரிகிறது. அதோடு சொல்ப கல்வியுடையவன். பெட்டி அரைராத்தல் ஜாவாபுகையிலைப்பெட்டிதான். இதில் இடதுபக்கம் அடியில் இரண்டு பெருவிரல் குறி தவிர வேருெரு விசேடமுமில்லை. இதில் நிறைய மட்ட உப்பு போடப்பட்டிருக்கிறது. இந்த உப்பு தோல் முதலிய மட்டமான பண்டங்கள் பதம் செய்வதற்கு உபயோகமாவது. இந்த உப்பில் இந்த இரண்டு அதிசயவஸ்துக்கள் இருக்கின்றன" என்ருன்.

அதன்பிறகு ஆனந்தஸிங் அந்த இரண்டு செவிகளையும் எடுத்து மிக்க உன்னிப்பாய்க் கவனித்தான். விசுவநாதனும் இலக்ஷ்மணஸிங்கும் அவன் இருபுறங்களிலும் நின்று குனிந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அவற்றைப் பெட்டியிலேயே வைத்துவிட்டுச் சற்றுநேரம் சிந்தனையிலிருந்தான்.

இலக்ஷ்:—"இரண்டு செவிகளும் ஒரே ஜதையல்லவென்று அறிந்துகொண்டா யல்லவா?" நான் அதைக் கவனித்தேன். மாணவர்கள் கேலிக்காக இதைச் செய்த தாயின், சவங்கள் சோதனை செய்யப்படுமிடத்தில் அவர்களுக்கு வெவ்வேறு மனிதரின் இரண்டு செவிகள் கிடைப்பது கஷ்டமல்ல.

ஆனந்த:—ஆம் உண்மையே. ஆனால் இது கேலி சமாசாரமல்ல.

இலக்ஷ்:—நீ யதே நிச்சயம் என்று கருதுகிறாயா?

ஆனந்த:—அத்தாட்சிகள் அதற்கு விரோதமாக இருக்கின்றன. அதுவுமன்றி சவச்சோதனை நடக்குமிடத்தில் பதம் செய்வதற்குத் திராவகங்களை யுபயோகிப்பார்கள். இச்செவிகளில் அத்தகைய குறி யொன்றுமில்லை. மேலும் இவை புதிதாகவுமிருக்கின்றன. இவை மட்டிக் கத்தியால் அறுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் அறுத்திருந்தால் இத்தகைய கத்தியினா லறுக்கமாட்டார்கள். இந்த உப்பையும் உபயோகிக்கமாட்டார்கள். இதில் விளையாட்டுச்சங்கதியே யில்லை. குரூரமான கொலை நடந்திருக்கிறது

இம் மொழிகளைக்கேட்டதே விசுவநாதன் மனதில் நடுக்கமுண்டாயிற்று. அச்சமயம் ஆனந்தஸிங் முகத்தில் உண்டான குரூரபார்வையை கண்டதே இதில் ஏதோ விபரீதமான சம்பவம் அடங்கியிருக்கிறது என்று விசுவநாதன் மனதிற்பட்டது. இலக்ஷ்மணஸிங் மட்டும் பாதிநம்பாதவன் போல் தலையசைத்தான். "விளையாட்டு என்ற உத்தேசத்திற்கு ஆக்ஷேபனைகள் என்னமோ இருக்கின்றன. இம்மாது மிக்க அடக்கமாய் நெடுநாளாக வசித்துக்கொண்டிருக்கிறாள். ஒருநாள் இரண்டுநாள்கூட வெளியில் சென்றதில்லை. அப்படிப்பட்டவள்மேல் இம்மாதிரி இழிவான வஞ்சந்தீர்த்துக்

கொள்ள வேண்டுமென்று யாருக்கு எண்ணம் இருக்கும்? இம்மாதுக்கு இதைப்பற்றி யொன்றுமே தெரியவில்லை.

ஆனந்தஸிங் "அதைத்தான் நாம் கண்டுபிடிக்கவேண்டும். என் வரையில் நான் கொண்ட உத்தேசத்தையே பின்பற்றிச் செல்வேன். என் உத்தேசம் இரண்டு கொலைகள் நடந்திருக்கின்றன வென்பதே. இவற்றில் ஒன்று ஆடவனுடையது. ஒன்று ஸ்திரீயுடையது. இரண்டு செவிகளிலும் தோட்டணிவதற்குத் துளைசெய்யப்பட்டிருக்கிறது. ஆடவன் உஷ்ணப்பிரதேசங்களில் பழகியவன். இவர்கள் இருவரும் இறந்து போனார்கள். ஏன் கொல்லப்பட்டார்கள்? இதைப்பற்றிய சரித்திரம் சீக்கிரத்தில் வெளிவரும். இன்று வெள்ளிக்கிழமை. நேற்று வியாழக்கிழமை இது பாலாபுரம் தபாலில் போடப்பட்டிருக்கிறது. ஆகையால் இக்கொலைகள் புதன்கிழமை அல்லது செவ்வாயிரவு நடந்திருக்கவேண்டும்.

இந்த இரண்டு ஆட்களும் கொல்லப்பட்டிருந்தால் இச்சிப்பத்தைக் குசலாம்பாளுக்கு யனுப்பியது யாராக விருக்கும்? கொலை செய்யதவனாகவே யிருக்கவேண்டும். இப்போது நாம் கண்டுபிடிக்க வேண்டியது இச்சிப்பத்தை யனுப்பிய ஆளையே. அவன் இதைக் குசலாம்பாளுக் கனுப்புவதற்குத் தகுதியான காரண மிருக்கவேண்டும். அவர்கள் கொல்லப்பட்டதை யவளுக் கறிவிக்கவாவதிருக்கவேண்டும். அல்லது அவள் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கவாவது எண்ணிச் செய்திருக்கவேண்டும். அப்படி யிருந்தால் அவன் யாரென்பதை அவள் அறிந்திருக்கவேண்டும். அவளுக்குத் தெரியுமா? எனக்கு அது சந்தேகமா யிருக்கிறது. அவளுக்குத் தெரிந்திருந்தால் அவள் போலீஸாரை வரவழைப்பதேன். பேசாமல் இவற்றைப் புதைத்துவிட்டிருந்தால் ஒருவருக்கும் சங்கதியே தெரியாது. அவள் அவனைக் காட்டிக் கொடுக்கலாகாதென்று கருதியிருந்தால் அப்படித்தான்

செய்திருக்கவேண்டும். காட்டிக்கொடுக்க எண்ணினவளாக விருந்தால் அவன் பெயரைக் கூறிவிடவேண்டும். இங்கு விவகாரம் சிக்கலாயிருக்கிறது” என்றான்.

2-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் தோட்டத்திலிருந்த வேலியின் மேல் பக்கம் பார்த்துக் கொண்டே படபடப்பாய்ப் பேசியவன் திடீலென்றெழுந்து “இம்மாதை இரண்டொரு கேள்விகள் கேட்க வேண்டும்” என்று கூறிக் கொண்டே வீட்டை நோக்கிச் சென்றான். இலக்ஷ்மணஸிங் “அப்படியாயின் நான் இப்படியே செல்கிறேன். எனக்கு இன்னொரு வேலை யிருக்கிறது. என்வரையில் அம்மாதிடம் நான் அறிந்து கொள்ளத்தக்கது வேறொன்றுமில்லை நீ என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் காணலாம்” என்றான். ஆனந்தஸிங் நாங்கள் செல்லும்போது வழியில் உன்னைக் காண்கிறோம் என்றான்.

இரண்டுநிமிடங்கள் கழித்து ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் குசலாம்பாளிருக்கும் முன்னறைக்குச் சென்றார்கள். அம்மாது தையல் வேலை செய்து கொண்டிருக்கிறாள். இவர்களைக் கண்டதும் கையிலிருந்த துணி முதலியவற்றை மடியில் வைத்துக் கொண்டு “என்ன சங்கதி?” என்று கேட்பவள்போல் குறிப்பாய் நோக்கினாள். பிறகு ஆனந்தஸிங்கை நோக்கி “இது தவறாக நடந்துவிட்டதென்றும் யாருக்கோ அனுப்ப எண்ணியது தவறாக எனக்கனுப்பப் பட்ட தென்றும் எனக்கு நன்றாகத் தெரிகிறது. நான் இதைப் பன்முறை அந்த இன்ஸ்பெக்டருக்குக் கூறியே யிருக்கிறேன். அவர் நகைக்கிறார். எனக்குத் தெரிந்தவரையில் உலகில் எனக்கு விரோதி ஒருவருமே யில்லை. அப்படி

யிருக்க யார்தானகட்டும் எனக்கு இப்படிப்பட்ட துஷ்ட காரியம் ஏன் செய்யவேண்டும்?" என்றாள்.

ஆனந்தலிங் சாவதானமாய் அவள் பக்கத்திலிருந்த ஆசனத்திலுட்கார்ந்து கொண்டு "அம்மா! நானும் அதேப் படிதான் அபிப்பிராயப் படுகிறேன். பெரும்பாலும்." என்று கூறியதும் தட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு குசலாம்பாளுடைய உருவத்தை உற்று நோக்குவதைக்கண்ட விசுவநாதன் மிக்க வியப்படைந்து பார்த்தான். ஆனந்தலிங் முகத்தில் வியப்பும் திருப்தியும் நிறைந்திருந்தன. ஆயினும் ஆனந்தலிங் பேசிக்கொண்டே யிருந்தவன் ஏன் தட்டென்று நின்றுவிட்டான் என்று குசலாம்பாள் நிமிர்ந்து பார்த்தபோது ஆனந்தலிங்கின் முகத்தில் ஒரு மாறுதலுமின்றி எப்போதும்போலிருந்தது. ஆயினும் அவன் மனதில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டாயிருக்கிறதென்று விசுவநாதன் மட்டுமறிந்து கொண்டான். அவன் அம்மாதின் முகம் முதலியவற்றை நன்றாக உற்று நோக்கினான். ஆனந்தலிங்குக்கு என்ன காரணத்தால் அத்தகைய மனக்கிளர்ச்சியும் ஒருவித அதிசயமான திருப்தியும் உண்டாயிற்றென்பது அவனுக்கு விளங்கவில்லை.

ஆனந்தலிங் குசலாம்பாளை நோக்கி "அம்மா! தாங்களை யிரண்டொரு கேள்விகள் மட்டுமே கேட்கக் கருதினேன்" என்றான்.

அம்மாது "அய்யா! கேள்விகளால் எனக்குப்போதுமென்றாய் விட்டது" என்று சற்று சலிப்போடு கூறினாள்.

ஆனந்:—"உமக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள் போலும்" என்றான்.

இதைக் கேட்டதே யம்மாது திடுக்கிட்டு மிக்க வியப்படைந்து "இரண்டு சகோதரிகளா? உமக் கெப்படி தெரியும்?" என்றாள்.

ஆனந்தஸிங் "இங்கு உள்ளே வரும்போது முன் கூடத்தில் மாட்டியிருந்த ஒருபுகைப்படத்தைக் கண்டேன். அதில் மூன்று மாதர்கள் இருக்கிறார்கள். மத்தியில் உமது உருவமிருக்கிறது. மூன்றுருவங்களின் சாயலை நோக்கினால் மூன்றும் சகோதரிகளாகவே யிருக்கவேண்டு மென்று புலப்பட்டது" என்றான்.

குசலாம்:—"ஆம்; நீர் கூறுவது உண்மையே அவர்கள் என் சகோதரிகள் சாரதாளும் மரகதமும்" என்றாள்.

ஆனந்த:—இதோ என் தோளுக்குப்பின் இன்னொரு படம் இருக்கிறது. இது உலக்கூரில் பிடிக்கப்பட்ட உன் சிறிய தங்கையாகிய மரகதம்மாள் இன்னொரு ஆடவன் கூட உட்கார்ந்து பிடித்துக்கொண்ட படம். அவன் உடையால் அவன் கப்பலில் வேலைசெய்பவன் என்று தெரிகிறது. அப்போது உமது தங்கைக்கு மணமாகவில்லையென்று தோன்றுகிறது.

குசலாம்:—நீர் பார்வையில் விஷயங்களை யதிசூக்குமமாய்க் கிரகித்துக்கொள்கிறீர்.

ஆனந்த:—அது என் தொழில்.

குசலாம்:—நல்லது நீர் கூறியது சரிதான். ஆனால் அவள் பெரியண்ணனை மணம்புரிந்து கொண்டாள். அவன் அப்போது அவள்மேல்மிக்க காதல்கொண்டிருந்தான். இப்படம் எடுக்கப்பட்டபோது அவன் இருந்த கப்பலை விட்டுவிட்டுப் பிறகு வேறு கப்பல்களுக்கு மாறிவிட்டான். கடைசியில் நான்பார்த்தபோது "புதுமாளிகை" என்ற கப்பலிலிருந்தான். அவன் ஒருமுறை பெண்ணைக்காண இங்கு வந்தான். அது சச்சரவு நடந்ததற்கு முன். அதன்பிறகு அவன் கரைக்கு வந்தால் அதிகமாய்க்குடிக்கும் வழக்கமுடையவனாய் விட்டான். முதலில் என்னோடு சண்டையிட்டுக்கொண்டான். பிறகு

சாரதாளோடு சண்டையிட்டுக் கொண்டான். இப்போது மரகதம் எங்களுக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டபடியால் அவர்கள் என்னநிலைமையிலிருக்கிருர்களென்று எங்களுக்குத் தெரியாது” என்ருள்.

அச்சங்கதி யவளுக்கு மிக்க வியாகூலத்தை யளித்தது போல் தோன்றியது. தனியாயிருக்கும் பெரும்பாலானவர்களைப்போல் அவள் முதலில் பேச மயங்கினுலும் பிறகு மிக்க தாளாளமாய்ப் பேசத்தொடங்கினுள். தன் தங்கை புருடனுகிய பெரியண்ணனைப்பற்றிப் பல தகவல்களைக் கூறினுள். பிறகு தன்னிடம் போஜனம் செய்துகொண்டிருந்த மாணவர்களைப்பற்றி பேசத்தொடங்கி அவர்கள் பெயர் அவர்களுடைய அதிருப்தியான நடவடிக்கைகள், அவர்கள் இருந்த வைத்தியசாலைகள் யாவற்றைப் பற்றியும் விவரமாகக் கூறினுள். ஆனந்தஸிங் இடையிடையில் ஒவ்வொரு கேள்வி கேட்டு அவளிடமிருந்து எவ்வளவு சங்கதிகள் கிரகிக்கக் கூடுமோ அவ்வளவும் கிரகித்துக் கொண்டன்.

பிறகு அவளை நோக்கி “உம்முடைய சகோதரி சாரதா அம்மாள்-நீங்கள் இருவரும் மணமில்லாமலிருக்கிறவரையில் நீங்கள் ஒன்ருய் வசிக்கிறதில்லையோ?” என்ருன்.

குசலாம்:—ஆ சாராதாளுடைய குணம் உமக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இதைப்பற்றி வியப்படைய மாட்டீர். நான் கோரைக்காட்டுக்கு வந்தபோது அவளையும் அழைத்து வந்து இருவரும் ஒன்ருய் வசிக்கவே முயன்ருேம். இரண்டு மாதங்களுக்கு முன் இருவர்க்கும் சச்சரவு நேர்ந்து விட்டதால் பிரிந்துவிட வேண்டியதாயிற்று. என் தங்கைக்கு விரோதமாய் ஒருவார்த்தை கூறக்கூட எனக்கு விருப்பமில்லை. ஆனுல் ஒன்றுமட்டும் கூறுகிறேன். அவள் அனுவசிய

மாய் எல்லாவற்றிலும் தலையிடுவாள். அவளைத் திருப்திப் படுத்துவது ஆகாதகாரியம்.

ஆனந்த:—"அச்சகோதரி உலக்கூரிலுள்ள உங்கள் சுற்றத்தாரிடம் கூடச் சச்சரவு செய்துகொண்டாள் என்று கூறினீரல்லவா?" என்றான்.

குசலாம்:—ஆம். ஒருகாலத்தில் அவர்கள் மிக்க சினேகர்களாக விருந்தார்கள். அவள் அவர்களருகில் இருப்பதற்காகவே அங்கு வசிக்கச் சென்றாள். இப்போதோ பெரியண்ணனைத் திட்ட அவளுக்கு எவ்வளவு வசைமொழிகளிருந்தாலும் போதாது. இங்கு அவளிருந்த கடைசி ஆறுமாதகாலமாக அவனுடைய குடியையும் கெட்ட நடவடிக்கைகளையுமே என்னேரமும் பேசிக்கொண்டிருந்தாள். இவள் ஏதோ அவன் விஷயங்களில் பிரவேசித்தாள் போல் காண்கிறது. அவன் அதைப்பற்றி கண்டித்திருப்பான். அதுவே விரோதத்திற்கு ஆரம்பம்.

ஆனந்த:—"வந்தனம். நான் விடைபெற்றுக்கொள்கிறேன். உமது சகோதரி சாரதா அம்மாள் புதுவீதியில் வசிப்பதாய்க் கூறினீரல்லவா. தாங்கள் கூறியபடி உமக்குக் கொஞ்சமும் சம்மதமில்லாத விஷயத்தைப்பற்றித் தொந்திரை யளித்ததற்காக மிக்க விசனமடைகிறேன்" என்று கூறினான்.

உடனே இருவரும் அங்கிருந்து புறப்பட்டு அருகிலிருந்த வண்டிமேட்டிற்குச்சென்று புதுவீதி எவ்வளவு தூரம் என்று கேட்டார்கள். வண்டிக்காரன் ஒரு மைல் தூரம் தான் என்றான்.

ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, "ஏறு சீக்கிரம் வண்டியில். இத்தகைய விஷயங்களை ஆறவிடலாகாது. இது சொல்பமான விவகாரமாய்த் தோன்றினும் இதில் சம்பந்தப்பட்ட இரண்டொரு விஷயங்களில் விசேஷமிருக்

கிறது. வழியில் ஒரு தந்தியாபீஸினருகில் வண்டியை நிறுத்தச்சொல்லு." என்றான்.

அவ்வாறே ஒரு தபாலாபீஸ்முன் வண்டி நின்றதும் ஆனந்தஸிங் ஒரு தந்திபெழுதி ஆபீஸில் கொடுத்துவிட்டு அங்கிருந்து நோாய்ப் புதுவீதிக்குச் சென்றார்கள். ஆனந்தஸிங் வண்டிக்காரனை நோக்கி வண்டி யிருக்கட்டும் என்றுகூறி வீட்டின் கதவைத் தட்டினான். உடனே மிக்க நாணயமாய் உடையணிந்த ஒரு வாலிபமனிதன் வந்து கதவைத் திறந்தான். ஆனந்தஸிங் மரகதம்மாள் வீட்டில் இருக்கிறார்களா என்று கேட்டான். அந்த ஆள் "அந்தம்மாள் நேற்று முதல் மூளைவியாதியால் ஜன்னிகண்டு அபாயமான நிலைமையி லிருக்கிறார்கள். நான் வைத்தியனானதால் கூறுகிறேன். இப்போது ஒருவரையும் காணக்கூடிய நிலைமையில் அம்மாதில்லை. தாங்கள் பத்துநாள் கழித்துவந்தால் நலம்" என்று கூறிக் கதவை மூடிக்கொண்டு சென்றான்.

ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி "சரிதான். முடியாதென்றால் முடியாதுதான். வா" என்று கூறி வண்டியிலேறிக்கொண்டான். விசுவநாதனும் ஏறிக்கொண்டு "ஒரு சமயம் அந்தம்மாளிடம் ஒரு சமாசாரமும் கிடைக்காதாகும். சுகமாயிருந்தாலும் ஒன்றும் கூறப் பிரியமில்லாதவளாகவிருப்பாள்" என்றான்.

ஆனந்த:—"அம்மாதிடம் நான் அறியவேண்டிய தொன்றுமில்லை. நான் அவள் உருவத்தைமட்டும் காண விரும்பினேனேயன்றி வேறில்லை. நான் எவ்வளவு அறிந்துகொள்ளவேண்டுமோ அவ்வளவும் அறிந்துகொண்டாயிற்று. இப்போது ஒரு நாணயமான ஹோட்டலுக்குச்சென்று போசன மருந்துவோம். அதன்பிறகு இலக்ஷ்மணஸிங்கைச் சந்திப்போம்" என்றான்.

அவ்வாறே ஒரு ஹோட்டலில் தங்கி இருவரும் போஜ

னம் செய்தார்கள். போஜனம் செய்தபோது ஆனந்தஸிங் வேறு விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தானேயன்றி குற்றசமாசாரத்தைப்பற்றிப் பேசவில்லை.

இருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது இலக்ஷ்மணஸிங் அங்கு ஆயத்தமாய்க் காத்திருந்தான். இவர்களைக் கண்டதும் "ஆனந்தஸிங்! உனக்கொரு தந்தி வந்திருக்கிறது" என்றான். ஆனந்தஸிங் அதை வாங்கிப் பிறித்துப்பார்த்து இது நானனுப்பிய தந்திக்குப்பதில் என்று கூறிக்கொண்டே அதைச் சுருட்டிச் சேபியில் வைத்துக்கொண்டான்.

இலக்ஷ்:—ஏதாவது அகப்பட்டதா ?

ஆனந்தஸிங் "எல்லாமே யகப்பட்டது" என்றதே இலக்ஷ்மணஸிங் மிக்க வியப்படைந்து "என்ன? எளனம் செய்கிறாயோ? இதற்குள் எல்லாவற்றையும் உண்மையாகவே கண்டுபிடித்து விட்டாயா?" என்றான்.

ஆனந்த:—நான் கூறுவதில் கேலி எள்ளளவுமில்லை. எல்லா விஷயங்களையும் கண்டுபிடித்து விட்டேன்.

இலக்ஷ்:—"அப்படியாயின் குற்றவாளி யார்?" என்றான்.

ஆனந்தஸிங் ஒரு துண்டுக் கடிதத்தில் ஒரு பெயரை யெழுதி யவனிடமளித்து, "இதோ யிவன்தான். ஆனால் இவனை நாளை ஏழுமணிக்குத்தான் பிடிக்கமுடியும். நீ ஆறு மணிக்கு ஆயத்தமாயிரு. நான் வந்து உன்னையழைத்துச் செல்கிறேன். அப்போது எல்லா விஷயங்களையும் கூறிவிடுகிறேன். ஆனால் என் பெயரைமட்டும் வெளியிடவேண்டாம். மிக்க கஷ்டமான விவகாரமாயிருந்தாலன்னியில் மற்ற விஷயங்களில் நான் என்பெயரை வெளியிடுவதில்லை" என்றான்.

இலக்ஷ்மணஸிங் அச் சீட்டிலிருக்கும் பெயரைக்கண்டு மிக்க வியப்போடு நோக்கிக்கொண்டே, "சரி அப்படியே ஐந்து மணிக்கே ஆயத்தமாக விருக்கிறேன்" என்றான்.

ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் உடனே அங்கிருந்து புறப்பட்டார்கள். இரண்டுமணி நேரத்திற்குள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். மறுநாட்காலை இருவரும் காலைப் போசனம் செய்து விட்டு சுருட்டுப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது விசுவநாதன், இக்குற்றத்தைப்பற்றிய சங்கதி என்ன என்றான்.

ஆனந்த:—இதுவா? இது முன் நடந்த இரண்டு மூன்று விஷயங்களைப் போல் காரியத்திலிருந்து காரணத்தைக் கண்டறிய வேண்டியதாகவிருக்கிறது. இதில் தோராயமாய் நடந்த விஷயங்கள் தெரிந்ததேயன்றி குற்றவாளியின் செய்கைகளைப் பற்றிய விவரம் பிறகு தான் தெரியவரும்.

விசுவ:—அப்படியாயின் இதைப் பற்றிய பூரண விவரம் இன்னும் கிடைக்கவில்லை.

ஆனந்த:—இதைப்பற்றிய முக்கிய விஷயங்களனைத்தும் தெரிந்து விட்டன. கொலையுண்ட இரண்டாட்களில் இன்னும் ஒருவர் யார் என்று தெரியா விடினும் கொலையாளி யாரென்று தெரிந்து விட்டது. உன் ஆலோசனைக்கே யதுபுலப்பட்டிருக்கு மென்று கருதுகிறேன்.

விசுவ:—கப்பலில் வேலைசெய்யும் அந்தப் பெரியண்ணன் மேல் தான் உனக்கு ஐயமுண்டாயிருக்கிறதென்று கருதுகிறேன்.

ஆனந்த:—ஐயமல்ல யாவும் உத்தேசங்களின் மேல் தெரிவதாயினும் என் மனதிற்கு நன்றாய்த் தெளிவாய்ப் புலப்படுகின்றன. இதிலுள்ள முக்கிய விஷயங்களைப் படிப்படியாய்க் கவனிப்போம். நாம் இந்த குற்றத்தைப்பற்றி சிந்திக்க ஆரம்பிக்கும் போது நம்மனதில்

ஒரு சிந்தனையுமில்லை. நம் மனதில் எவ்வித உத்தேசமுமில்லை. இனி நமக்குப் புலப்படும் விவகாரங்களின்மேல் உத்தேசம் செய்யக்கருதினேம். முதலில் நமக்கு என்ன புலப்பட்டது. ஒரு களங்கமற்ற மாது, மரியாதையான பார்வையுள்ளவள் இருக்கிறாள். ஒரு புகைப்படமிருக்கிறது. அப்படத்தால் அவளுக்கு இரண்டு சகோதரிகளிருக்கிறார்களென்று தெரிகிறது. அச்சிப்பம் இந்த மூன்று சகோதரிகளில் ஒருத்திக்குத்தான் அனுப்பப்பட்டிருக்க வேண்டுமென்று உடனே என் புத்திக்குப் புலப்பட்டது. நான் பின்னால் எப்படி ருசுவாகிறதோ அதன்படி தீர்மானிப்போம். அதுவரையில் அதை யொருபக்கம் வைத்துவிடுவோம் என்று தீர்மானித்தேன். அதன்பிறகு நாம் தோட்டத்திற்குச்சென்று அப்பெட்டியைச் சோதித்தோம்.

அச்சிப்பத்தில் கட்டப்பட்டிருந்த கயிறு கப்பலில் வேலை செய்கிறவர்கள் உபயோகிப்பது. உடனே இதில் கப்பல் சம்பந்தம் இருக்கிறதென்று தெரிந்துகொண்டேன். அம்முடி மாலுமிகள் போடும் முடியென்று தெரிந்தது. ஆடவர்காதில் துளையிடுவது கப்பல் வேலைக்காரருக்குள் தான் வழக்கம். அதோடு அச்சிப்பம் துறைமுக நகரத்திலிருந்து அனுப்பப்பட்டது. இவற்றை யறிந்ததும் இதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களெல்லாம் கப்பலில் சம்பந்தப்பட்டவர்களென்று தீர்மானித்தேன். பிறகு அம்மாதை யிரண்டொரு கேள்வி கேட்கலாம் என்று முயன்றேன். அப்போது தான் அவள் முகத்தை நன்றாக உற்று நோக்கிக் காதையும் கவனித்தேன். உடனே எனக்கு மிக்க வியப்புண்டாய் விட்டது. அதோடு ஒரு விஷயத்தில் திருப்தியுமுண்டாயிற்று. ஏனெனில் ஒரு சமயம் அச்சிப்பம் அவளுக்குத் தவறாய் வந்துவிட்டிருந்தால் நமது ஆராய்ச்சி புதிதாய்த்

தொடங்கப்படவேண்டும். இப்போது இது இவளுக்கே வந்திருக்கவேண்டுமென்று தெரிந்தது.

நீ வைத்திய சாஸ்திரமறிந்தவன். தேக அமைப்பைப் பற்றி நன்கறிவாய். மனிதர் தேகத்திலுள்ள மற்ற அவையவங்களைக் காட்டிலும் செவிமட்டும் மிக்க வித்தியாசத்தைக் காட்டுமென்று அறிவாய். அந்த சாத்திரத்தைப்பற்றிக் கடந்த வருட வைத்திய சஞ்சிகையில் வெளிவந்த வியாசங்களை நன்முகக் கவனித்தேன். ஆகையால் பெட்டியிலிருந்த செவிகளை மிக்க உன்னிப்பாகவும் சாத்திரயுக்தமாகவும் கவனித்தேன். அதன்பிறகு குசலாம்பாள் செவிகளைப் பார்த்தபோது ஒவ்வொரு அம்சத்திலும் இவள் செவிகள் பெட்டியிலிருந்த பெண் செவிக்குப் பூரணமாக ஒத்திருந்தன. அதன்மேல் அச்செவி இவள் சகோதரிகளில் ஒருத்தியின் செவியேயென்று உணர்ந்தேன்.

அதன்மேல் தான் படத்தைப்பற்றி பிரஸ்தாபித்தேன். அவள் தாராளமாய்ப் பேசத் தொடங்கினுள். பெரியண்ணபிள்ளையைப்பற்றிய சங்கதிகளனைத்தும் வெளிவந்தன. ஒரு காலத்தில் அவனும் சாரதாளும் மிக்க நேசமாக விருந்தார்களென்று தெரிகிறது. சாரதாள் அவன் மணம் புரிந்து கொண்டபிறகும் அவன் அருகிலிருக்க விரும்பி அதே யூரில்போய் வசித்துக்கொண்டிருந்தாள். பிறகு எக்காரணத்தாலோ விரோதம் நேர்ந்து விட்டது. என்ன காரணம்? இவள் அன்பைப் பெரியண்ணன் ஏற்றுக்கொள்ள வில்லை யென்றே கருதுகிறேன். பெரியண்ணன் தன் மனைவிமேல் மிக்க அன்புடையவன் என்றும் அவளை விட்டுச் சில நாட்கள் கூடப் பிறிந்திருக்க அவன் பிரியப்படவில்லை யென்றும் குசலாம்பாள் கூறியது நினைவிலிருக்கிறதல்லவா. ஒருவன் மேல் காதல் கொண்ட ஸ்திரீ அம்மனிதன் தன் காதலை அலட்சியம்

செய்து விட்டால் உடனே அவள் அவனுடைய கொடிய விரோதியாய்த் திரும்பி விடுகிறாள் என்பது நிச்சயம். இதிலும் அப்படித்தான் நேர்ந்திருக்கவேண்டும். பின்னால் நடந்த விபரீதங்கட்கு மூலை யதிற்றானிருக்க வேண்டும்.

குசலாம்பாள் அவன் தன் பெண்சாதியருகில் இருப்பதற்காக நல்ல வருமான முள்ள வேலைகளை யெல்லாம் விட்டு விட்டான் என்று கூறியிருக்கிறாள். ஒரு மனிதன் தன் மனைவிமேல் காதலால் இப்படிச் செய்வான்றான். ஆனால் அவள் மேல் ஏதேனும் சந்தேகமிருந்தால் கட்டாயம் அப்படிச் செய்வான். இதில் சந்தேகமே யென்று எனக்குப் புலப்படுகிறது. ஏனெனில் யோக்கியமாக விருக்கிற மனிதன் மனைவியால் வியாகுல முண்டாயின், அதை மறக்கப் போதை வஸ்துக்களை யருந்துவது நமது நாட்டில் இயற்கை. சாரதாளிடம் சச்சரவு உண்டானது முதல்தான் பெரியண்ணன் குடிக்கத் தொடங்கி யிருக்கிறான். யாவற்றையும் யோசிக்கும்போது அவன் மனைவி வேறு எவனிடமோ நேசங்கொண்டாளென்றும் அவன் அவர்கள் இருவரையும் கொன்று விட்டானென்றும் யெனக்குப் புலப்படுகிறது. ஆம் வேறுவிதமாகக் கருத ஒரு காரணமும் ஏற்பட வில்லை.

இப்போது அச்செவிகளை யவன் குசலாம்பாளுக்கு என் அனுப்பவேண்டும் என்பதே கேள்வி. பெரும்பாலும் குசலாம்பாள் உலக்கூரில் இருக்கும்போது விவகாரங்கள் இத்தகைய முடிவிற்கு வருவதற்குத் தானும் காரணமாக விருந்திருப்பாள். இப்போது பெரியண்ணனே யிதைச் செய்ததாக வைத்துக்கொண்டால், அவன் இருந்த கப்பல் கொலை நடந்த மறுநாள் பாலாபுரத்திற்கு வந்தது. அங்கு அவன் அச்செவிகளைத் தபால் மூலமாக அனுப்புவதற்கு வசதியாயிருக்கிறது. சிலர் தான் காதலித்தமாது கைவசப்

படாவிட்டால் அவனையும் அவள் கணவனையும் கொன்று விடத் தக்க அத்தகைய கொடூரகுணமுடையவர்களாகவு மிருக்கிறார்கள். ஆனால் இதில் அப்படியில்லை யென்பதற்குப் பலமான அத்தாட்சிகளிருக்கின்றன.

ஆகையால் உலக்கூர் போலீஸ் இலாகாவிலுள்ள என் நண்பன் ஒருவனுக்குத் தந்தி கொடுத்து பெரியண்ணன் வீட்டிலிருக்கிறானா? அவன் மனைவி யிருக்கிறாளா? என்ற விஷயங்களை விசாரித்துத் தெரிவிக்கும்படி கேட்டேன். பிறகு தான் நாம் சாரதாள் வீட்டிற்குச் சென்றோம்" என்றான்.

3-வது அத்தியாயம்.

விசுவ:-சாரதாளைப் பார்க்கவேண்டுமென்று ஏன் கருதினாய்?

ஆனந்த:—அவள் செவியும் இந்த இரண்டு சகோதரிகளின் செவிகள் போலவே யிருக்கிறதா பார்ப்போம் என்றும் அதன்மேல் அவளிடமிருந்து ஏதேனும் சமாசாரம் வெளிவருகிறதா பார்க்கலாமென்றும் எண்ணினேன். ஆயினும் அவள் ஒன்றும் கூறமாட்டாள் என்றே எனக்குச் சந்தேகம். ஏனெனில், கோரைக்காடு முழுமையும் இச்சங்கதி பரவிவிட் டிருக்கிறது. அச்சிப்பம் யாருக்கு அனுப்பப்பட்டதென்று அவள் அறிந்தே யிருக்கவேண்டும். அவள் இவ்விஷயத்தில் நீதிக்கு உதவி செய்யவேண்டுமென்று கருதி யிருந்தால் முன்னமே யிதைப் போலீஸாருக்கு அறிவித்திருப்பாள்.

எப்படி யிருந்தாலும் அவளைப்போய்ப் பார்க்கவேண்டியது நமது கடமையாயிருந்தது. ஆனால் இச்சங்கதி அவளுக்கு மனவியாதியை யுண்டாக்கிவிட்டது. அவளுக்கு எல்லா விவரமும் தெரிந்துவிட்டது. இவ்விஷயம் அவள் மூளை

யில் தாக்கியதால் புத்தி கலங்கி ஜன்னியை யுண்டாக்கி விட்டது. நாம் அவளைக் காணவே சமயமாயில்லை. ஆனால் அவளைக் காணாமலே நமது காரியத்தை முடித்துக்கொள்ளலாமென்று எனக்குத் தைரியம் இருந்தது.

நான் எதிர்பார்த்தபடி போலீஸ் ஸ்டேஷனில் நான் அனுப்பிய தந்திக்குப் பதில் வந்தது. அந்த விடை திட்டமாய் விஷயங்களை விளக்கி விட்டது. பெரியண்ணனுடைய வீடு மூன்று தினங்களாய் மூடப்பட்டிருக்கிறது. அண்டையிலிருப்போர் அவன் மனைவி தன் சுற்றத்தாரைக் காண்பதற்கே சென்றிருப்பாள் என்று கருதுகிறார்கள். ஆற்றோரத்தில் விசாரித்ததில் பெரியண்ணன் புதுமாளிகை யென்ற கப்பலில் வேலை செய்வதாகவும் அது அருகிலிருக்கும் நகரத்திற்குச் சென்றிருப்பதால் நாளை மாலை ஏழுமணிக்கு வருமென்றும் தெரியவந்தது. அவன் அங்கு வந்து இறங்கியதும் நாம் ஆயத்தமாய் அங்கு காத்திருந்து அவனைப் பிடித்துக்கொள்ள வேண்டும்" என்றான்.

மறுநாள் மாலை ஐந்து மணிக்கு ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் வீட்டிலிருந்து புறப்பட்டு இலக்ஷ்மணஸிங் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அவனை யழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். நதிக்கரையில் கப்பல்கள் படகுகள் வந்து நிற்கும் துறையருகிலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்றார்கள். இலக்ஷ்மணஸிங்கின் ஆள் ஒருவன் கூட அழைத்து வரப்பட்டான். சுமார் ஏழேகால் மணிக்கு அந்த ஆள் ஹோட்டலுக்குள் வந்து இலக்ஷ்மணஸிங்கை நோக்கி கப்பல் விட்டது என்று கூறினான்.

அரைமணி நேரத்திற்குள் ஆனந்தஸிங், இலக்ஷ்மணஸிங், விசுவநாதன் மூவரும் புது மாளிகை யென்ற கப்பலில் ஏறினார்கள். அக் கப்பல் பிரயாணத்திலிருந்து வந்து இன்னும் ஒருமணி நேரமாக வில்லை. ஆகையால் கப்பித்தான்

அவசரமாக இறக்க வேண்டிய சாமான்களையும் ஆட்களையும் கீழே யிறக்கும் வேலை சரியாய் நடக்கிறதா வென்று கவனித்துக் கொண்டு மேல் தட்டிலேயே யிருந்தான். ஆனந்தஸிங் காப்டெனருகிற் சென்று "உங்கள் கப்பலில் பெரியண்ணன் என்ற ஒரு ஆள் இருக்கின்றானல்லவா?" என்றான்.

காப்டென் ஆனந்தஸிங்கை யொரு விதமாய் உற்று நோக்கி "ஏன் கேட்கிறீர்?" என்றான். ஆனந்தஸிங் "நான் அவனைக் கண்டு பேச வேண்டும்" என்றான். அதன்மேல் காப்டென் "அவன் இம்முறை இங்கிருந்து புறப்பட்டது முதல் புத்தி சுவாதீன மில்லாதவன் போலும் உன்மத்தம் பிடித்தவன் போலும் நடந்து கொண்டிருந்தான். கப்பலில் ஆட்கள் மிக்க எச்சரிக்கையோடு தங்கள் தங்கள் வேலைகளைக் காலக்கிரமப்படி செய்யவேண்டும். இன்றேல் கப்பலுக்கே யாபத்தாய் முடியும். ஆகையால் நான் அவனை வேலைசெய்ய வேண்டாமென்று நிருத்திவைத்திருக்கிறேன். அவன் இரண்டாவது அடுக்கில் ஏழாவது நம்பர் அறையில் இருக்கிறான். அவன் நடக்கையை நோக்கத் தாங்கள் அவனைக்காண வந்தது ஏதோ விசேஷ சமாசாரமாக விருக்குமென்று என் புத்திக்குத் தோன்றியது" என்றான்.

ஆனந்தஸிங் தன்கூட விருக்கும் இருவரோடு பெரியண்ணன் இருக்கும் அறைக்குச் சென்றான். பெரியண்ணன் நாற்காலியிலுட்கார்ந்துகொண்டு எதிரிலுள்ள மேஜைமேல் தன் முழங்கைகளை நாட்டிக் கரங்களின்மேல் சிரசைத் தாங்கிக் குனிந்தபடியிருந்தான். தன் அறைக்குள் யாரோ வருவதை யறிந்ததே திடுக்கிட்டு எழுந்து அவர்களை யுற்றுநோக்கிவிட்டு மறுபடி தட்டென்று உட்கார்ந்து கொண்டான்.

ஆனந்தஸிங் பெரியண்ணன் அருகில் சென்றபோது இலக்ஷ்மணஸிங் தன் ஜேபியிலிருந்த கைத்துப்பாக்கியைத்

துரிதமாய் எடுத்துக்கொண்டான். விசுவநாதனும் அவ்வாறே ஆயத்தமாயிருந்தான். ஆனால் ஆனந்தஸிங் ஒரு கலக்கமுமின்றி, "உன் பெயர் பெரியண்ணன் தானே?" என்றான். பெரியண்ணன் ஆம் என்றான். ஆனந்தஸிங் "குசலாம்பாள் தங்கை மாகதத்தின் கணவன்" என்றான்.

அதைக்கேட்டதே யவன் முகம் மிக்க விகாரமடைந்து "ஏன்? ஏன் கேட்கிறாய்? நீ யார்?" என்றான்.

ஆனந்தஸிங் "நீ குசலாம்பாளுக்கு ஒரு அட்டைப் பெட்டியில் இரண்டு அபூர்வப்பொருள்களை வைத்து அனுப்பினாயே. அதைப்பற்றி விசாரிக்கவந்தோம். நீ அதைப் பற்றி யென்ன கூறப்போகிறாய்?" என்றான்.

பெரியண்ணன் சங்கதி தெரிந்து கொண்டான். "சரி என்ன சங்கதியா? எல்லா சங்கதியுந்தான். இனி முழுமையும் வெளியிட்டு விடுகிறேன். அய்யா நீங்கள் என்னைத் தூக்கிற் போட்டாலும் சரி; என்ன செய்தாலும் சரி; நடந்த சங்கதியை யுள்ளபடி கூறிவிடுகிறேன். என் தண்டனையை நான் இப்போதே யனுபவிக்கிறேன். அது சகிக்கக் கூடியதாயில்லை. அந்த இரண்டு உருவங்களும் கோரரூபமாய் என்னெதிரில் நின்றபடியே யிருக்கின்றன. நான் யாவும் எழுதிக்கொடுத்து விடுகிறேன்" என்றான்.

ஆனந்தஸிங்கும் இலக்ஷ்மணஸிங்கும் அவ்வாறே செய் என்றதும் அவன் பின் கண்டவாறு எழுதிக்கொடுத்தான்.

"இப்போது நான் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றாவது மன்னிப்புப்பெற வேண்டுமென்றாவது கருதியொன்றும் கூறேன். உண்மையைக் கூறுகிறேன். சாரதாள் என்பவளே இதற்கெல்லாம் காரணம். ஆம் என் சாபம் அவள் உயிருள்ள மட்டும்கூட அவள் மனதிற்குச் சற்றேனும் நிம்மதியிராமற் செய்யும். முதலில் நான் கண்மண் தெரியாமல் குடிக்கத் தொடங்கியது உண்மையே. ஆயி

னும் என் மனைவி யென்னை மன்னித்துவிட்டு என்னோடு கூடவே பிரியாமலிருந்திருப்பாள். இந்தச் சாரதாள் ஏழரை நாட்டுச்சனிபோல் என் வீட்டிற்கு வந்தாள். இவள் என் மேல் காதல் கொண்டாள். இதுதான் எல்லா அனர்த்தங்களுக்கும் மூலம். நான் என் மனைவியின் காலால் மிதிக்கப்பட்ட மண்ணின்மேல் வைக்கும் அன்புகூட இவள் மேல் வைக்கமாட்டேனென்று இவளுக்குத் தெரிந்ததே இவளுடைய காதல் முழுமையும் கொடிய வெறுப்பாய் மாறிவிட்டது.

இவர்கள் மூன்று சகோதரிகள். மூத்தவளாகிய குசலாம்பாள் நல்லவள். இரண்டாவதாகிய சாரதாள் பேயே. மூன்றுவதாகிய மரகதம் தேவமாதே. மூத்தவளுக்கு கிட்டத்தட்ட நாற்பது வயதிருக்கும். சாரதாளுக்கு முப்பத்திரண்டு. மரகதத்திற்கு நான் மணம் செய்துகொண்ட போது இருபத்தாறு. நாங்கள் மணம் செய்துகொண்டபின் மிக்க மனமொத்து சந்தோஷமாகவே வாழ்ந்துகொண்டிருந்தோம். என் மனைவியைப்போல் உத்தமி கிடையாது. பிறகு இந்தச் சாரதாளை யொருவாரம் எங்கள் வீட்டில் வந்திருக்கும்படி அழைத்தோம். அவள் அவ்வாறே வந்தாள். வாரம் மாதமாய் விட்டது. ஒரு சம்பவத்தின்மேல் ஒரு சம்பவம் நேர்ந்து அவள் செல்வது தடைப்பட்டுக்கொண்டே வந்தது. கடைசியில் எங்கள் குடும்பத்தில் அவளும் ஒருத்திமாதிரியாய் விட்டாள்.

அப்போது நான் மதுபானம் செய்வதேயில்லை. நாங்கள் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தோம். எல்லாம் சந்தோஷமாகவே நடந்து வந்தது. ஐயோ கடவுளே இப்படி விபரீதத்தில் முடியுமென்று யார் கண்டார்கள்? நான் அடிக்கடி வாரத்தின் கடைசியில் கப்பல் ஒரு துறையில் தங்கும்போதெல்லாம் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்

தேன். சில சமயங்களில் கப்பல் சாக்கேற்ற ஒரு துறையில் ஏழு நாள் எட்டு நாள் தங்குவதுண்டு. அச்சமயம் நான் வார முழுமையும் வீட்டிலேயே யிருப்பேன். இதனுல் நான் சாரதாள் சகவாசத்தில் சற்று அதிககாலம் இருக்க நேர்ந் தது. சாரதாள் வசீகரமான முகமும் பிரகாசம் பொருந்திய கண்களும் உடையவள். ஆயினும் மரகதம் அருகிலிருக்கும் போது நான் சாரதாளை யேறெடுத்துப் பார்ப்பதுகூட இல்லை.

சில சந்தர்ப்பங்களில் சாரதாள் என்னேடு தனியே யிருக்க விரும்புகிருளென்று எனக்குப் புலப்பட்டது. ஒவ்வொரு சமயம் அவள் என்னை உலவுவதற்காக வெளியில் வரும்படி தூண்டுவாள். ஆனுல் நான் அவள் மனதில் விசேஷ எண்ணம் இருப்பதாகச் சற்றும் தெரிந்துகொள்ள வில்லை. ஒருநாள் நான் விழித்துக்கொண்டேன். அன்று கப் பலிலிருந்து வீட்டிற்குவந்தேன். என் மனைவி வீட்டிலில்லை. எங்கேயென்று கேட்டதற்கு சாரதாள் "அவள் கடைக்குச் சென்றிருக்கிருள்" என்ருள். என் மனம் அவளைக்காணுத தால் துடித்துக்கொண் டிருந்தது. சாரதாள் "ஏன் உன் மனைவியை ஐந்து நிமிடம் பார்க்காமலிருந்தால் உன் மன திற்குப் பிடிக்கவில்லைபோ லிருக்கிறது. இதனுல் நீ என்னை அகௌரவப்படுத்துகிறதாகிறது. ஏனெனில் என் சகவாசத் தில் இருப்பது உனக்கு வெறுப்பாயிருப்பதாகத் தெரி கிறது" என்ருள். நான் "அப்படிக்கருதலாகாது" என் றேன். அப்போது அவள் முகத்தை நன்ருக நோக்கினேன். அவள் கண்களில் உண்டான பிரகாசத்தால் அவள் இரகசி யத்தை யறிந்துகொண்டேன். உடனே நான் என் முகத் தைச் சுளித்துக்கொண்டு வெறுப்போடு எட்டப்போய் விட்டேன். சாரதாள் உடனே எழுந்து வெறுப்போடு நகைத் துக்கொண்டே அறையைவிட்டு வெளிச்சென்ருள்.

அன்றுமுதல் சாரதாள் என்மேல் பூரண வெறுப்புக்

கொண்டாள். அதன்பிறகு அவளை யெங்கள் வீட்டில் வைத்துக்கொண் டிருந்தது முட்டாள் தனமாய்விட்டது. அதோடு நான் இன்னொரு முட்டாள்தனம் செய்துவிட்டேன்; அதாவது அச்சங்கதியை யென் மனைவியிடம் கூறினால் அவள் மனதிற்கு வருத்தமுண்டாகுமென்று கூறவில்லை. பிறகு குடும்ப விவகாரங்கள் எப்போதும்போல் நடந்து வருவதாகவே புலப்பட்டது. ஆனால் சில நாட்கள் கழித்து என் மனைவியின் நடக்கையில் சற்று மாறுதல் உண்டானதுபோல் தோன்றியது. அவள் இதுகாறும் என்னிடம் பூரண நம்பிக்கையோ டிருப்பவள், நான் எந்த காரியத்திற்கு என்ன காரணம் கூறினும் சற்றும் ஐயம் கொள்ளாமல் பூரணமாய் நம்பிக்கொள்கிறவள் வரவர என் அற்ப விஷயங்களிலெல்லாம் என் நடக்கையில் சந்தேகங்கொள்ளவும், சற்றுநேரங் கழித்து வந்தால் காரணங்கேட்கவும், எங்கிருந்தாவது கடிதம் வந்தால் "யாரிடத்திலிருந்து வந்தது. எழுதியது ஆணு பெண்ணு? ஏன் உனக்குக் கடிதம் எழுதினார்கள்?" என்று இம்மாதிரியெல்லாம் விகல்ப புத்தியோடு நடக்கத் தொடங்கினாள். அடிக்கடி நான் ஏதேனும் கடிதம் முதலியவற்றை வைத்துக்கொண் டிருக்கிறேனாவென்று என் ஜேபியைச் சோதிக்கத் தொடங்கினாள். நாளுக்குநாள் என் மனதிற்குக் கோபமூட்டத்தக்கவிதமாக நடந்துகொள்ள ஆரம்பிக்கவும் எள்ளளவாவது காரணமென்பதின்றியே எங்களுக்குள் அனாவசியமான சச்சரவுகள் உண்டாகத் தொடங்கின.

அதுமுதல் சாரதாள் என்னிடம் நெருங்கிப் பேசுவதில்லை. ஆனால் அவளும் என் மனைவியும் அதுமுதல் இணைபிரிவதில்லை. அப்போது சாரதாள் எனக்கும் என் மனைவிக்கும் மிக்க தந்திரமாக விஷமம் உண்டாக்கிக்கொண்டிருந்தாள். என் மட்டி புத்திக்கு அப்போது அது தெரியாமல்

போய்விட்டது. அப்போது என் மனதிற்கு உண்டான வியாகுலமே நான் மதுபானம் செய்யத்தொடங்கியதற்குக் காரணம். என் மனைவி யெப்போதும்போல் இருந்திருந்தால் நான் அப்படி யருந்தத் தொடங்கியிரேன். அதன்மேல் என் மனைவிக்கும் எனக்குமிருந்த மனஸ்தாபம் வரவா அதிகமாகத் தொடங்கியது. அச்சமயத்தில்தான் இந்தப் பரசுராமன் என்பவன் வந்தான். அதன்மேல் துன்பங்கள் ஒன்றுக்கு ஆயிரமாயின.

முதல் முதல் அவன் சாரதாளைப் பார்க்கவே வந்தான். பிறகு வரவா எங்களைப் பார்க்க வரவே தலைப்பட்டான். அவன் வசீகரமாய்ப் பேச வல்லவன். எங்கு சென்றாலும் சுலபமாகவே யாவரையும் சிநேகம்செய்துகொள்ளக்கூடியவன். அவன் புத்திசூக்குமமும் சாதுர்யமான பேச்சுமுடையவன். பாதி யுலகத்தைப் பார்த்தவன். ஆகையால் யாவர் மனதையும் கவரும் வண்ணமாய்ச் சம்பாஷிப்பான். சகவாசத்தில் அவன் சந்தோஷத்தை யளிக்கத்தக்கவனே. அதில் சற்றும் ஐயமில்லை. அவன் இவ்வாறே யொரு மாதம் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தான். இப்படிப்பட்டவனால் நமக்கு வியாகுலம் நேரிடலாகுமென்று என் மூடபுத்திக்குப் படாமல் போய்விட்டது. கடைசியில் ஒரு அற்ப சந்தர்ப்பத்தால் எனக்குச் சந்தேகம் உதித்துவிட்டது.

அதாவது ஒருநாள் என் மனைவி யெதிர்பாராத சமயத்தில் நான் வீட்டிற்கு வந்தேன். நான் கதவைத் திறந்துகொண்டு அவள் அறைக்குள் செல்லும்போது அவள் முகத்தில் மிக்க சந்தோஷமான பிரகாசம் உண்டாகியது. ஆனால் அவள் வந்தது நான் என்று உணர்ந்ததே அவள் முகத்திலுண்டான சந்தோஷம் மறைந்து முகம் வாட்டமடைந்துவிட்டது. அவள் முகத்தைச் சுளித்துக்

கொண்டு திரும்பிவிட்டாள். எனக்கு அவ்வளவே போதும். அச்சமயம் இவள் எதிர்பார்க்கத்தக்க ஆள் அந்தப் பாசுராமனையன்றி வேறு ஒருவருமேயில்லை. அச்சமயமட்டும் அவன் எதிரிலிருந்தால் அவனைக் கொன்றுவிட்டே யிருப்பேன். நான் ஆத்திரத்தோடு என் மனைவியை நோக்கி "எங்கே சாரதாள்?" என்றேன். என் கண்களில் அப்போது கோபத்தனல் வீசியிருக்கும். என் மனைவி, "சாரதாள் சமையல்கட்டி லிருக்கிறாள்" என்றாள். நான் உடனே அங்கு சென்று சாரதாளைநோக்கி "சாரதா! அந்தப்பயல் பாசுராமன் என்பவன் இனி யென்வீட்டில் அடியெடுத்து வைக்கலாகாது" என்றேன். அவள் "ஏன் அவன் வரக்கூடாது?" என்றாள். நான் "அது என்னமோ-என் கட்டளை யவ்வளவே" என்றேன். அதற்கவள் "இந்த விடத்தில் என் சினேகிதர் வருவது தகுதியல்லவென்றால் நான் இருப்பதும் தகுதியல்லதான்" என்றாள்.

நான் "சரி. அப்படியாயின் உன் பிரியப்படி நீ நடக்கலாம். அவன் மறுபடி இங்குவந்தானே நீ வேடிக்கைப் பொருளாக வைத்துக்கொண்டிருப்பதற்காக அவன் செவிகளில் ஒன்றைக் கட்டாயம் உனக்கு அனுப்புவேன்" என்று கூறினேன். அதைக்கேட்டதும் அவள் பீதியடைந்து ஒன்றும் கூறாமல் மௌனமாக விருந்து அன்றுமாலையே யென் வீட்டைவிட்டுப் போய்விட்டாள்.

4-வது அத்தியாயம்.

பெரியண்ணன் சரித்திரத் தொடர்ச்சி:—

இப்போது அவள் என் மனைவிக்கும் எனக்கும் மிக்க விரோதத்தை யுண்டாக்கத் தீர்மானித்துக் கொண்டாள். ஆகையால் என் வீட்டை விட்டுச் சென்றவள் நகரை

விட்டுச் செல்லாமல் நான் வசிக்கும் வீதிக்கு இரண்டு வீதிகளுக் கப்பால் ஒரு வீடெடுத்துக் கொண்டு அதில் கப்பலில் வேலை செய்யும் ஆட்களுக்கு சாப்பாடு அளிக்கத் தொடங்கினாள். பரசுராமன் அங்கு எந்நேரமும் இருக்கத் தொடங்கினான். என் மனைவி தன் சகோதரியைக் காணச் செல்வது போல் அங்கு சென்று அவளோடும் பரசுராமனோடும் சிற்றுண்டி யருந்தத் தொடங்கினாள். இவள் எத்தனை முறை யங்கு சென்றாளோ தெரியாது. ஒரு நாள் நான் அவளைப் பின் தொடர்ந்து சென்றேன்.

நான் போய்க் கதவைத் தட்டி யுள்ளே செல்லும் போது பரசுராமன் பின் பக்கச்சுவரின் மேல் ஏறி யோடி விட்டான். அவனுடைய கோழைத்தனம் என் சந்தேகத்தை ஸ்திரப் படுத்துவது சுபாவமே. நான் கோபத்தோடு என் மனைவியை நோக்கி "நான் இன்னொரு முறை நீ யிவனோடு கூடவிருப்பதைக் கண்டால் உன்னைக் கொன்று விடுவது நிச்சயம்" என்று கூறி அங்கிருந்து அழைத்து வந்து விட்டேன். என் மனைவி மிக்க பீதியடைந்து முகம் வெளுத்து நடுங்கிக் கொண்டே யென் கூட வந்தாள்.

அன்று முதல் என் மனோ நிம்மதியும் குடும்ப சந்தோஷமும் அடியோடு போய் விட்டன. என் வியாகுலம் அதிகமாய் விட்டது. அதை மறக்க நான் அதிகமாய்க் குடிக்கத் தொடங்கினேன். என் மனைவிக்கு என்னிடம் வெறுப்பும் பயமுமே அதிகமாயின. அதிகமாகக் குடிக்கத் தொடங்கவே அவளுக்கு என்மேல் வெறுப்பு அதிகமாயிற்று." என்று கூறி ஆயாசத்தால் பெருமூச்சு விட்டுக் கொண்டு இரண்டொரு நிமிடங்கள் பேசாமலிருந்தான்.

நேயர்களே இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒருவிஷயம் உங்களுக்குக் கூறவிரும்புகிறோம். இதை நாம் கூறுவிட்டால் நாம் இதை யெழுதுவதன் நோக்கமே வெளிவராமல் இக்

கதையால் பயனில்லாமற் போம். நேயர்களே பெரியண்ணன் குடும்பத்தில் விகல்பம் உண்டானதற்குக் காரணம் என்னவென்று சிந்தியுங்கள். முதலில் சாரதாளே காரணமென்று புலப்படுகிறது. அது உண்மையே. இருக்கட்டும்; அவள் புருடனுக்கும் மனைவிக்கும் இவள் கலக முண்டாக்கி மரகதம் இந்தப் பரசுராமனிடம் சினேகம் கொள்ளும்படியாகவும் அதனால் பெரியண்ணனுக்கு வியாகுல முண்டாகும்படியாகவும் செய்தாள் என்று நன்கு விளங்குகிறது. இங்கு நன்றாய் ஆலோசனை செய்யுங்கள். அன்னியனான ஒரு வாலிபப் புருடன் வீட்டில் வந்திருந்தால், அவனோடு மரகதம் தாராளமாகப் பேசவும் புழங்கவும் இருந்ததும் அவன் பெரியண்ணன் இல்லாதபோது கூட வீட்டிற்கு வரவும் அவன் மனைவியோடு பேசவும் வழக்கமாக விருந்தால் தான் அவர்களுக்குள் நேசமுண்டாக வழி யேற்பட்டது.

மாதர் அன்னிய புருடர்களோடு பேசும்படிக்கும் புழங்கும் படிக்கும் விடப்படுவது தான் நாகரீகம் என்ற அவர்கள் துர்ஆசாரமே இக் கொலைகளுக்குக் காரணம் என்பதில் சற்றும் ஐயமின்றாம். அங்கு இத்தகைய ஆசாரங்களால் நேரிடும் தீங்குகளுக்குக் கணக்கே யில்லை. இப்படிப் பிரத்தியட்சமாய் என்னிறந்த திருட்டாந்தங்களிருந்தும், நமது நாட்டாரில் சிலர் இத்தகைய ஆசாரந்தான் நாகரீக சீர்திருத்தமென்றும் நமது மாதர்களையும் அவ்வாறு பழக்குவது தான் நலமென்றும் கூறுவதோடு அவ்வாறே செய்யவும் பிறர்க்குப் போதிக்கவும் துணிகிறார்கள். இவர்கள் மதி மயக்கம் எப்போதுதான் தெளியுமோ? அறியோம் இனிப் பெரியண்ணன் எழுதிவைத்த வாக்கு மூலத்தின் மற்ற பாகத்தைக் கூறுவோம்:—

"கடைசியில் முடிவான இப்பெருந் தீங்கு சம்பவித்தது. எங்கள் கப்பல் ஒரு வாரம் பிரயாணத்திற்கு வெளிச் சென்

றது. ஆனல் ஆரம்பத்திலேயே கப்பலில் சொல்ப பழுது நேர்ந்து விட்டது ஆகையால் பன்னிரண்டு மணிநேரம் துறை முகத்திற்றங்கத் திரும்பி விட்டோம். கப்பல் துறை முகத்தில் நின்றதும் நான் கரையிறங்கி வீட்டிற்குச் சென்றேன். எதிர்பாராத விதமாய் இவ்வளவு சீக்கிரத்தில் நான் திரும்பி வருவதைக் காண என் மனைவி மிக்க வியப்படைவாள் என்றும் சந்தோஷமு மடைவாளென்றும் எண்ணிக் கொண்டே நான் சென்றேன். நான் நாங்கள் வசிக்கும் வீதியிற்றிரும்பி சற்றுதூரம் சென்றபோது எதிரில் ஒரு வண்டி வந்து என்னைக் கடந்து சென்றது. அவ்வண்டியில் என் மனைவியும் பாசுராமனும் இருந்தார்கள். இருவரும் மிக்க சந்தோஷத்தோடு என் நினைவு எள்ளளவு மின்றி சிரித்துக் கொண்டும் சம்பாஷித்துக் கொண்டு மிருந்தார்கள். நான் சற்று நேரம் திகைத்து நின்று விட்டேன்.

நான் கடவுளறியக் கூறுகிறேன். அந்த வினடியிலிருந்து என் புத்தியும் மனமும் என் சுயாதீனத்தி லில்லை. நடந்த சங்கதிகளையெல்லாம் நினைக்கும்போது இருண்ட கனவு போற்றோன்றுகிறது. நான் கொஞ்சகாலமாய் அதிகமாகக் குடித்துக் கொண்டிருந்தேன். யாவும் சேர்ந்து என் புத்தியை யடியோடு கலக்கிவிட்டன. இப்போது கூட என் மண்டைக்குள் ஆயிரம் இரயில் வண்டித் தொடர்கள் ஓடுவதுபோல் சத்தமுண்டாகிக் கொண்டிருக்கிறது. அன்றைய தினம் வண்டியில் அவர்களைக் கண்டதே என் மனதில் பெருந் தீ யெரிவது போலிருந்தது.

நான் அதிவேகமாய் வண்டியின் பின்னல் ஓடினேன். என் கையில் ஒரு பலமான கழியிருந்தது. வண்டியிலிருப்பவர்கள் என்னைக் காணவண்ணம் மறைந்து மறைந்து ஓடினேன். கடைசியில் வண்டி இரயில்வே ஸ்டேஷனில் போய் நின்றதும், அவர்களிருவரும் இறங்கி பிரயாணச்சீட்டு வாங்கு

மிடத்திற்குச் சென்றார்கள். ஜனக்கூட்டம் அதிகமாக விருந் தது. நானும் கூட்டத்தில் நுழைந்து அவர்களுக்கு இரண்டு கஜ தூரத்திலேயே நின்று எந்த ஊருக்குச் சீட்டுவாங்குகிறார் களென்று கவனித்தேன். அவர்கள் சற்று தூரத்திலுள்ள படகுத்துறை யென்ற விடத்திற்குச் சீட்டு வாங்கினார்கள். நானும் ஒன்று வாங்கிக்கொண்டேன். வண்டி வந்ததும் அவர்கள் ஏறிய வண்டிக்கு மூன்றாவது வண்டியில் நான் ஏறிக்கொண்டேன்.

படகுத்துறையில் இறங்கியதும் அவர்கள் நேராக கடற்கழியில் படகுக ளிருக்குமிடத்தை நோக்கிச் சென்றார் கள். நான் எட்டவே மறைந்து நடந்து பின்னால் சென் றேன். அவர்களிருவரும் ஒருபடகில் ஏறிச்சென்றார்கள். அவர்கள் சற்று தூரம் சென்றபின் நானும் ஒருபடகில் ஏறிச் சென்றேன். அங்கு மணிக்கணக்கின்மேல் படகு வாடகைக் குக் கொடுப்பது வழக்கம். உல்லாசமாய்ச் செல்ல விரும்பு வோர் தாங்களே படகை யோட்டிக்கொண்டு போய்த் திரும்பிவந்து படகை யவர்களிடம் ஒப்பித்துவிட்டு கழிந்த நேரத்தின்படி வாடகைப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும்.

அச்சமயம் எங்கள் இரண்டு படகுகளையன்றி அங்கு வேறு படகுகள் கழியில் நடமாடவில்லை. ஆகையால் இவர்களிருவரும் நமது கையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண் டார்கள் என்று எண்ணிக்கொண்டு வேகமாய் அவர்கள் படகை நோக்கிச் சென்றேன். அச்சமயம் கொஞ்சம் மூடு பனியாயிருந்ததால் ஒருகஜதூரத்தில் நெருங்குமட்டும் ஆட் களின் முகம் நன்றாக விளங்காது. அவர்களும் படகை வேகமாகவே செலுத்திச் சென்றார்களாகையால் நான் நெருங்குவதற்குள் கரையிலிருந்து நெடுந்தூரம் போய்விட்

டார்கள். அது கடலருகில் ஒரு பெரிய ஏரியைப்போலிருக்கும் அகன்ற கழியானதால் கொஞ்சம் தவறினுல் கடலில் போய்ச் சேர நேரிடும்.

நான் கடைசியில் அவர்கள் படகை நெருங்கிவிட்டேன். தங்களை நெருங்கிவரும் படகிலிருக்கும் என் முகத்தைக் கண்டதே, ஐயோ கடவுளே! அவர்கள் முகத்திலுண்டான விகார மாறுதலை இப்போது நினைத்தாலும் எனக்குப் பயமாகவிருக்கிறது. என் மனைவி வீறிட்டலறினுள். அவன் வெறிகொண்டவன்போல் சபித்துக்கொண்டே தன் கையிலிருக்கும் படகோட்டும் துடுப்பை யோங்கினுன். என் முகத்தில் அவன் கொலைக்குறியைக் கண்டிருக்கவேண்டும். நான் நெருங்கிச்சென்று என் கழியால் ஓங்கி யொரே அடி அடித்தேன். அவன் மண்டை முட்டைபோல் நொறுங்கிவிட்டது. அச்சமயம் என் மனைவியை யொன்றும் செய்யாமலே யுடனே திரும்பிவிடவே யிருந்தேன். ஆனுல் அதற்குள் அவள் "ஐயோ" என்று அவனைத் தழுவிக்கொண்டாள். உடனே அவள் மண்டை மேலும் அடிவிழுந்தது. அச்சமயம் நான் ஓர் ஆவேசங்கொண்ட காட்டுமிருகத்திற்குச் சமதையாயிருந்தேன். கடவுளே! அச்சமயமட்டும் அச்சாராதாள் அங்கிருந்திருந்தால் அவளும் அவர்களுடன் கூடவே விண்ணுலகடைந்திருப்பாள்.

அச்சமயம் சாராதாள் நினைப்பு எனக்கு வந்தது. அதோடு அவன் காதை யுனக்கனுப்புவேன் என்று நான் அவளுக்குக் கூறியதும் நினைவிற்கு வந்தது. உடனே அவர்கள் படகில் குதித்தேன். என் கத்தியை யெடுத்து இருவர் செவிகளிலும் ஒவ்வொன்று அறுத்துக் கொண்டேன். இரண்டு சவங்களையும் படகில் கட்டிவிட்டு படகின் அடியில் இருந்த பலகைகளில் ஒன்றை யுடைத்தேன். படகு அமிழ்ந்து போகுமட்டும் அங்கிருந்து பிறகு ஒருபுறம் கரை

யேறி நேரே என் கப்பலுக்குப்போய்ச் சேர்ந்தேன். கப்பல் மறுநாள் பாலாபுரம் வந்தபோது, சாரதாள் குசலாம்பாள் கூடவே வசித்துக்கொண்டிருந்ததால் அவ்விடத்திற்குச் செவிகளை யனுப்பினேன். இவ்வளவே உண்மையில் நடந்த சங்கதி" என்றெழுதிக் கையொப்பமிட்டு ஆனந்தஸிங்கை யும் இலக்ஷ்மணஸிங்கையும் நோக்கி "இவ்வளவே, உண்மை. நீங்கள் என்னைத் தூக்கிற்போட்டாலும் போடுங்கள். என்ன செய்தாலும் செய்யுங்கள். நான் செய்தது தப்பி தமே. ஆனால் என்னிலைமையில் நீங்கள் இருந்தாலும் அப் படியே செய்திருப்பீர்கள் என்றே நினைக்கிறேன். என்வரை யில் அதற்கேற்ற தண்டனையை முன்னமே யனுபவித் திருக்கிறேன். இன்னு மனுபவித்துக்கொண்டே யிருக் கிறேன். நான் அவர்களை யொருநொடியிற் கொன்றுவிட் டேன். அவர்கள் என்னை யின்னும் கொன்றுகொண்டே யிருக்கிறார்கள். நான் இன்னும் ஒருநாள் இருந்தால் இதைச் சகிக்கமுடியாமல் இறந்தே போவேன். அல்லது பைத்தி யம் பிடித்துவிடும். ஐயா! என்னைத் தனி யறையில் அடைக்காதீர்கள். ஐயோ வேண்டாம்! இங்கேயே கொன்று விடுங்கள். உங்களுக்குப் பெரும்புண்ணியம்" என்று அவர் கள் முன் முழங்காலிட்டுப் பணிந்தான்.

நேயர்களே! அக்கடிதம் முழுமையும் வாசித்துப் பார்த்த ஆனந்தஸிங்கும் இலக்ஷ்மணஸிங்கும் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள். இருவர் மனமும் கரைந்துவிட்டது. இலக்ஷ்மணஸிங் "நாம் இதை மறைத் தால் நமக்கு எங்கே கெடுதியாகுமோ" என்று மருண் டான். ஆனந்தஸிங் அவனைநோக்கி "நண்பனே! நானே யிவன் சங்கதிகளைக் கண்டுபிடித்தேன். சவங்கள் வெளி வாராதவரையில் கொலைக்கு ருசுவில்லை. நீ ஒன்று மறியா தவன்போ லிருந்துவிடு" என்றான். ஆனந்தஸிங்கின் மனோ

பாவத்தை யறிந்த இலக்ஷ்மணஸிங் அவ்வாறே யொப்புக் கொண்டான். அதன்மேல் ஆனந்தஸிங் பெரியண்ணன் இனி நடந்துகொள்ளவேண்டிய விதத்தைப்பற்றிச் சில புத்திமதிகளைக் கூறியபின் ஆனந்தஸிங், இலக்ஷ்மணஸிங், விசுவநாதன் மூவரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

சிகப்பு வட்டத்தின் அதிசயம்.

1-வது அத்தியாயம்

ஒருநாள் காலை ஆனந்தஸிங்கும் அவன் நண்பனாகிய விசுவநாதனும் காலைப்போஜன மருந்தியபின் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். விசுவநாதன் ஒரு கதைப் புத்தகத்தை வாசித்துக்கொண் டிருந்தான். ஆனந்தஸிங் தான் கண்டுபிடித்த குற்றங்களில் சம்பந்தப்பட்ட ஆட்களின் பெயர்களை எழுத்து வரிசைப்படி ஒரு பதிவுபுத்தகத்தில் எழுதிக்கொண்டிருக்கிறான். அச்சமயம் வீட்டு வேலைக்காரி அங்குவந்து ஆனந்தஸிங்கை நோக்கி, "அய்யா! யாரோ வாதம்மாள் என்ற ஒரு மாது தங்களைக்காண வந்திருக்கிறாள்" என்றாள்.

ஆனந்தஸிங் தனக்குள்ளாகவே "வாதம்மாள்! வாதம்மாள்!" என்று இரண்டொருமுறை கூறிவிட்டு ஏதோ சங்கதி நினைவிற்கு வந்தவன்போல் "ஆ சரி; அந்தம்மாளை யுள்ளே யனுப்பு" என்றான். இரண்டு நிமிடங்களில் வாதம்மாள் உள்ளே வந்தாள். அவள் முகத்தில் ஒருவிதமான கலக்கமிருந்தது. ஆனந்தஸிங் "ஏனம்மா க்ஷேமந்தானே? உட்கார். என்ன வேலையாக என்னைத் தேடி வந்தாய்?" என்றான்.

வரதம்மாள் "சங்கதி விசேஷமான தொன்றுமில்லை. என் வீட்டில் ஒருவன் வசிக்க வந்திருக்கிறான். அவன் இருக்கிற மர்மமான மாதிரி எனக்கு அதிருப்தியை யுண்டாக்குகிறது. ஒருவிதக் கலவரமாகவும் இருக்கிறது. அதனால் அதைப்பற்றி யுன்னிடம் ஆலோசிக்க வெண்ணியே நான் இவ்வளவு தூரம் வந்தேன்" என்றாள்.

அம்மாது கூறியதைக் கேட்ட ஆனந்தஸிங் தன் வேலையை நிருத்தாமலே, அவளைநோக்கி, "அம்மா! உனக்கு என் உதவி வேண்டிய அத்தகைய சந்தர்ப்பமாவது துன்பமாவது உண்டாயிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. மேலும் நானோ பல முக்கியமான விவகாரங்களை யுடையவன். உன் விவகாரம் அதற்காக என் காலத்தைச் செலவழிக்கத் தக்க அவ்வளவு விவகாரமாகப் புலப்படவில்லை" என்று கூறிவிட்டு தன் வேலையைச் செய்யத் தொடங்கினான்.

அம்மாதோ பிடிவாதமும் சாதாரணமாய் மாதர்க்குரிய தந்திரமு முடையவள். அவள் அதோடு திருப்தி யடையவில்லை. அவள் ஆனந்தஸிங்கை நோக்கி "போன வருடம் என் வீட்டில் வசிக்கும்படி நீ சிபார்சு செய்தாயல்லவா. பெரிய நாயகம் பிள்ளை யென்பவன்" என்றாள்.

ஆனந்த:—"ஆம், ஆம், அவன் சம்பந்தமாக ஒரு சமாசாரம் நடந்தது, மிக்க அல்ப விஷயம்" என்றான்.

வரதம்மாள்:—"அய்யா! அது உனக்கு மிக்க அற்ப விஷயமாகவே புலப்படலாம். ஆனால் உலக அனுபவமுடைய அம்மனிதன் அதைப்பற்றி யுனது சாமர்த்தியத்தைப் புகழ்ந்தது என்னென்று கூறுவேன். என் வரையில் நீ வந்து அந்தப் பெரிய மர்மத்தைக் கண்டு பிடிக்கும் வரையில் எல்லாம் கார்கால இருள் போலவே யிருந்தது. நீ எந்த மர்மத்தையும் கண்டு பிடித்து விடுவாய் என்ற நம்பகத்தால் இதன் மர்மத்தையும் உன்னிடம்

கூறினல் தான் உண்மை வெளியாகுமென்று நம்பியே வந்தேன்" என்ருள்.

உலகில் தான் புகழப்படுவதை விரும்பாத மனிதனைக் காண்பதரிது. அதோடு ஆனந்தஸிங் யாவரிடமும் விசுவாச முடையவன். இரக்கமான மனமுடையவன். ஆகையால் இம்மாதின் மனதில் கலக்கத்தை யுண்டாக்கும் விஷயம் எதுவோ யிருக்கிறது என்று கருதி "சரி அப்படியாயின் உன் விவகாரம் தானென்ன? உன் வீட்டில் வசிக்கும் ஒருமனிதனல் உனக்கேன் கவலை. யாவும் விவரமாய்க் கூறு" என்ருன்.

வரதம்மாள் "என் வீட்டில் இருப்பவன் தன் அறையை விட்டு வெளியில் வருவதேயில்லை" என்ருள். ஆனந்தஸிங், "அடடா! அவன் வெளியில் வருவதில்லை. அவனை நீ காண முடியவில்லை. இருந்தாலென்ன? நானே யுன்வீட்டில் அறைகள் எடுத்துக்கொண்டிருந்தால், நீ யென்னை வாரக்கணக் காய்க்கூட பார்க்கமுடியாமலிருக்கும்" என்ருன்.

வரதம்மாள்:—"அதிற் சந்தேகமில்லை. ஆனல் நீ கூறுகிறது ஒருமாதிரி. இது அப்படியல்ல. இது வேறுமாதிரி. அதனலுண்டாகும் பயத்தால் இரவில் எனக்கு நித்திரையே பிடிப்பதில்லை. காலைமுதல் இரவு முழுதும் அவன் தன் அறையில் ஓயாமல் உலவிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்கிறது. அப்படியிருந்தும் ஆளைக் காண்பது குதிரைக்கொம்பாய் இருக்கிறது. இது என் மனதிற்குப் பிடிக்கவில்லை. என் கணவரும் இவ்விஷயத்தைப்பற்றி கலக்கமுடையவராகவே யிருக்கிருர். ஆனல் அவர் காலையில் வேலைக்குப்போய் மாலையில் வருகிருர். நான் பகல் முழுமையும் வீட்டிலிருந்து கொண்டு இதைச் சகித்துக்கொண்டிருப்பதென்ருல் என்னல் உண்மையில் முடியவில்லை. அவன் அவ்வாறு

ஏன் ஒளிந்துகொண்டிருக்கவேண்டும்? அவன் அத்தகையகாரியம் என்ன செய்துவிட்டான்? வீட்டில் என்கூடவிருக்கும் வேலைக்காரப்பெண்தவிர நான் தனியாகவே யிருக்கிறேன். இவ்விஷயம் எனக்கு மிக்க கலக்கத்தை யுண்டாக்குகிறது." என்றாள்.

ஆனந்தஸிங் அன்போடு அவள் தோளைப்பற்றி தடவி "பொறு பொறு. மனக்கலக்கத்தை விட்டொழி. இத்தகையவிஷயத்தில் கலவரமடையலாகாது. தெரிகிறதா. தைரியமாயிரு-இப்போது நான் இதை யாராய்ச்சி செய்ய வேண்டுமாயின் எனக்கு எல்லா தகவல்களும் விவரமாகவும் தெளிவாகவும் நிதானமாகக் கூறவேண்டும். இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். நீ அற்பமானதென்று கருதும் அம்சம் கூட மிக முக்கியமானதாக விருக்கும். அம்மனிதன் எப்போது வந்தான்? வந்தபோது என்ன ஏற்பாட்டின்மேல் உன் வீட்டில் வாடகைக்கு அறை யெடுத்துக்கொண்டான்? யாவும் ஆதியோடந்தமாகக் கூறு பார்ப்போம்" என்றான்.

வரதம்மாள்:—"அவன் பத்து தினங்களுக்குமுன் வந்தான். இரண்டுவார வாடகை முன்னாடி யளித்துவிட்டான். குடியிருக்கவும் சாப்பாட்டிற்கும் வாரத்திற்குப் பத்து ரூபாய் கேட்டேன். வீட்டின் மேல்மாடியில் ஒரு முன் அறையும் ஒரு படுக்கையறையும் இருக்கின்றன. அவற்றில் வேண்டிய மஞ்சம் நாற்காலிகள் ஸோபா, மேஜை, பீரோ முதலிய எல்லா சாமான்களும் வசதிகளும் பூரணமாக விருக்கின்றன. அம்மனிதன் என் ஏற்பாட்டின்படி விடுவதாயின் வாரத்திற்கு இருபது ரூபா யளிக்கிறேன்" என்றான். அய்யா! நாங்களோ ஏழைகள். என் கணவன் சம்பாதிப்பது கொஞ்சம். இந்த வீட்டில் கொஞ்சம் வருமானம் வருவதால்தான் எங்களுக்கு உதவியாயிருக்கிறது. அவன் கொடுப்ப

தாகக் கூறிய தொகை எனக்குப் பெரிய தொகை யாய்த் தோன்றியது. அவன் உடனே இரண்டுவாரப் பணம் நாற்பது ரூபா யெடுத்துக் கொடுத்தான். என் நிபந்தனைப்படி நடந்துகொண்டால் நீடித்தகாலம் இப் படியே இரண்டுவாரத்திற் கொருமுறை பெற்றுக் கொள்வாய் என்று கூறினான்" என்றாள்.

ஆனந்தஸிங்:—"நிபந்தனைகளென்ன?" என்றான்.

வரதம்மாள்:—அய்யா! அவனிடம் ஒரு சாவி கொடுத்து விடவேண்டும் என்றான். அது சரிதான்: வாடகைக்கு இருப்போர் பெரும்பாலும் கேட்பதே. அவன் வரை யில் அவனை விட்டுவிடவேண்டும்; எக்காரணத்தாலும் அவனிடம் செல்லலாகாது.

ஆனந்த:—உண்மையில் அதில் ஒன்றும் அதிசயம் தோன்ற வில்லையே.

வரதம்மாள்:—சாதாரணமான விஷயத்தில் இல்லை தான். இது அசாதாரணமாக விருக்கிறதே. இப்போது அவன் அங்கு வந்து பத்துதினங்களாகின்றன. நானு வது என் கணவராவது, வேலைசெய்யும் பெண்ணாவது ஒரு முறையேனும் அவன் முகத்தைக் காணவேயில்லை. அவன் உள்ளே திரியும் காலடிச்சத்தமட்டும் பகலும் இரவும் கேட்கிறது. அவ்வளவேயன்றி அவன் முதல் முதல் அன்றிரவு வந்து வீட்டிற்கு வாடகை யளித் தானே அந்த ஒரு சமயம் நீங்கலாகப் பிறகு அவன் முகம் எப்படியிருக்குமோ தெரியாது. அதோடு அதே இரவு ஒரு முறை - ஒரே முறை வெளியிற்சென்று வந்தானே அதன்பின் அவன் தன் அறைகளை விட்டுப் புறப்படவேயில்லை.

ஆனந்த:—ஓஹோ! வெளியில் சென்று வந்தானோ?

வரதம்மாள்:—ஆம் அய்யா. வெளியிற்சென்று நெடுநேரம்

கழித்து, நாங்களனைவரும் படுக்கைக்குச் சென்றபின் வந்தான். ஆனால் அவ்வாறு சென்று வரப்போவதாகவும் தெருக்கதவைத் தாளிடவேண்டாமென்றும் முன்னடியே கூறியிருந்தான். அர்த்தராத்திரிக்குப் பின் அவன் வந்து மேலேறிச்சென்றபோது காலடிச்சத்தம் மட்டும் கேட்டது.

ஆனந்த:—போஜனம் யார்கொண்டுபோய் கொடுப்பது ?

வரதம்மாள்:—அவன் மணியடிக்கும்போது சாப்பாட்டை நாங்கள் கொண்டுபோய் அவன் அறைகளுக்கு'வெளியிலிருக்கும் நாற்காலிமேல் வைத்துவிட வேண்டும். அவன் போஜனம் செய்தபின் மறுபடி மணியடிக்கும்போது சென்றால் பாத்திரங்கள் அந்த நாற்காலிமேலிருக்கும். எடுத்துவந்துவிட வேண்டும். அவனுக்கு வேறு ஏதேனும் வேண்டியிருந்தால் ஒரு துண்டு கடிதத்தில் அவனுக்குவேண்டிய வஸ்துவின் பெயரை அச்சடித்து நாற்காலிமேல் வைப்பான்.

ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து அச்சடித்தா இருக்கிறது? என்றான்.

அம்மாது, "ஆம் அய்யா பென்ஸிலால் அச்சு எழுத்துக்களில் எழுதி வைக்கிறான். இதோ பாரும் உமக்குக் காட்டக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று மூன்று நான்கு துண்டு கடிதங்களைத் தன்மடியிலிருந் தெடுத்துக்கொடுத்து "இதோ தினசரிப்பத்திரிகை யென்று எழுதியிருக்கிறதே இது முதல் நாள் கொடுக்கப்பட்டது" என்றாள். மற்றவற்றில் "தீக்குச்சி" "சௌக்காரம்" "சுருட்டு" என்று குறித்திருந்தது.

அம்மாது "அய்யா அவன் முதலில் பேசியபோதே இந்த அதிசய ஏற்பாடுகளைக் கூறி விட்டான். பத்திரிகை

மட்டும் தினம் காலையில் வாங்கிவந்து அவன் காலைப்போஜனத்தோடுகூடவே வைத்துவிடவேண்டும்” என்றாள்.

ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து அக்கடிதத் துண்டுகளை யுற்று நோக்கி “விசுவநாதம்! நான் இது ஏதோ மிக்க அற்ப விஷயமென்றே கருதினேன். உண்மையில் இது அசாதாரணமாகவே யிருக்கிறது. மறைந்திருக்கிறது ஏன் என்பதை யறிந்துகொள்ளலாம். ஆனால் அச்செழுத்தில் எழுதுவானேன். இது மிக்க நச்சுவேலையல்லவா. ஏன் எழுதக்கூடாது. இதனால் என்ன தெரிகிறது” என்றான்

விசுவநாதன் “அவன் தன் கையெழுத்தை யொருவரும் காணலாகாதென்று மறைத்திருக்கிறான்” என்றான்.

ஆனந்தஸிங் “ஏன்? இம்மாது இவன் கையெழுத்தைப் பார்த்து விட்டால் இவனுக்கு என்ன கெடுதி யுண்டாய் விடும்? இப்படி ஒவ்வொருவார்த்தைமட்டும் எழுதுவானேன்” என்றான். விசுவநாதன் “எனக்கொன்றும் விளங்கவில்லை” என்றான்.

ஆனந்த:—“இதில் புத்திசாலித்தனமான ஆராய்ச்சிக்கு இடமிருக்கிறது. எழுத்துக்கள் முனை அகலமான பென்ஸிலால் எழுதப்பட்டிருக்கின்றன. ஊதாநிறப் பென்ஸில் சாதாரணமாகிரி. ஒரு கடிதத்தில் எழுதிய பிறகு துண்டாகக் கிழிக்கப்பட்டிருக்கிறது. இதோ ‘சௌக்காரம்’ என்பதில் உள்ள ‘சௌ’ என்ற எழுத்தின் கொம்பு சுழி பாதி போய்விட்டது. இது எதைக் காட்டுகிறது?

விசுவநாதன்:—எச்சரிக்கை.

ஆனந்த:—ஆம். ஆளைப்பற்றிய உளவையளிக்க விரற்குறி முதலிய ஏதேனும் இருக்கலாகும். ஏனம்மா! அவன் எவ்வளவு உயரமிருந்தான்?

வரதம்மாள்:—மத்திம உயரம், தாடி வைத்திருக்கிறுன், கொஞ்சம் கறுத்தநிறம். வயது முப்பதுக்கு மேலிராது.

ஆனந்த:—இவற்றைத்தவிர வேறு அடையாளங்களொன்றும் கூறமுடியாதோ?

வரதம்மாள்:—நமது பாஷையை நன்ருகப் பேசுகிறுன். ஆயினும் உச்சரிப்பில் அவன் அன்னிய நாட்டானென்றே நான் கருதினேன்.

ஆனந்த:—அவன் நல்ல நாணயமான உடை யணிந்திருந்தானல்லவா?

வரதம்மாள்:—மிக்க ஒழுங்காகவும் சுத்தமாகவும் உடுத்துக் கொண்டிருந்தான். பெரியமனிதத்தரா. கறுப்புடைகள்.

ஆனந்த:—அவன் பெயர் ஒன்றும் கூறவில்லேயே?

வரதம்மாள்:—இல்லே.

ஆனந்த:—அவனுக்குக் கடிதம் வருவதில்லேயோ, யாரும் வந்து அவனேக் காண்பதில்லேயோ?

வரதம்மாள்:—இல்லே ஒருவரும் வருவதில்லே.

ஆனந்:—ஆயினும் நீயாவது வேலேக்காரப் பெண்ணுவது காலேயில் சுத்திசெய்ய அவன் அறைக்குச் செல்வீர்களல்லவா?

வரதம்மாள்:—இல்லே. இல்லே. தன் வேலேகளே யெல்லாம் அவன் தானே செய்து கொள்கிறுன்

ஆனந்த:—பேஷ் பேஷ். இது மிக்க குறிப்பிடத்தக்கதே. அவன் சாமான்கள் என்ன கொண்டு வந்தான்?

வரதம்மாள்:—அவன் ஒரே யொரு பெரிய பிரயாணப் படுக்கை கொண்டு வந்திருந்தான். வேருென்று மில்லே.

ஆனந்த:—சரி. அதனுல் நாம் தெரிந்துகொள்ளத்தக்கது. ஒன்றுமில்லே. ஆயினும் அவன் வந்தது முதல் அவன்

அறையிலிருந்து ஒரு பொருளும் வெளிவரவில்லையா? ஒன்றுமே யில்லையா?

அம்மாது தன் பையிலிருந்து ஒரு கடித உறையையும் இரண்டு பற்றவைத்த தீக்குச்சிகளையும் ஒரு துண்டு சிகரெட்டையும் மேஜைமேல் எடுத்து வைத்து "இவை இன்று காலை அவன் ஆகாரத் தட்டிலிருந்தன. நீ அற்ப வஸ்துக்களிலிருந்து பெரிய விஷயங்களைக் கிரகிக்கும் புத்தி சாமார்த்திய முடையவனென்று கேள்விப்பட்டதால் இவற்றையும் யுனக்குக் காட்டலாமென்று கொண்டு வந்தேன்." என்றாள்.

ஆனந்தஸிங் அவற்றைப் பார்த்துத் தலையசைத்துவிட்டு, இக்குச்சிகள் சிகரெட் பிடிக்கக் கொளுத்தப்பட்டவை. ஆ! இந்த சிகரெட் துண்டு.. இதில் மிக்க ஆச்சரியம் உண்டாகிறது. அம்மனிதன் தாடி மீசை வைத்துக் கொண்டிருந்தானென்றல்லவா கூறினை?" என்று வியப்போடு கேட்டான்.

அம்மாது ஆம் என்றாள்.

ஆனந்தஸிங் "பேஷ்! இது எனக்குச் சற்றும் விளங்கவில்லை. மீசை தாடி யொன்றுமின்றி மழுங்கச் சிறைத்துக் கொண்டிருப்பவன்றான் ஒரு சிகரெட்டை இந்த முனை வரையில் பிடிக்க முடியும். சாதாரண மீசையுடையவன்கூட இவ்வளவு முனைவரையில் பிடித்தால் மீசை தீய்ந்து விடுமே." என்றான்.

விசுவநாதன் "ஏன் சுருட்டுக்குழையில் சொருகிப் பிடித்திருந்தால்?" என்றான்.

ஆனந்தஸிங் "நீ கிளப்பியது புத்திசாமார்த்தியமான ஆக்ஷேபனையே-ஆனல் நண்பனே, சிகரெட்டின் முனையைப்பார்! வாயில் வைத்து பற்களால் பற்றியிருந்த அடையாளம் நன்றாகத் தெரிகிறது. வரதம்மா! அங்கு இரண்டு பேர் இருப்பதாகத் தெரியவில்லையோ?" என்றான்.

வரதம்மாள்:—"இல்லையில்லை அய்யா. அவன் புசிக்கிற ஆகாரம் மிகக் கொஞ்சம். ஒரு மனிதன் அதைப் புசித்து எப்படி ஜீவித்திருக்கிறனென்பதே எனக்கு மிக்க வியப்பாயிருக்கிறது." என்றாள்.

ஆனந்தஸிங் சற்றுநேரம் சிந்தித்து "நல்லது, நாம், இன்னும் சில விஷயங்கள் நமக்குக் கிடைக்குமட்டும் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும். இப்போது நீகூறிய வற்றால் அவன்மேல் நீ குறை கூறத்தக்கது ஒன்றையும் காணோம். அவன் ஓர் அபூர்வ மனிதனாக விருந்தாலும் அவன் ஒரு தொந்திரையு மளிக்கவில்லை. உன் வாடகை சரியாய்ச் சேர்ந்து விடுகிறது. அவன் வாடகை தாராளமா யளிக்கிறான். அவன் வரையில் இரகசியமாக மறைந்திருந் தால் உனக்கு அதைப்பற்றி யென்ன? நாம் வலியப்போய் அவனைப் பார்ப்பதற்கு ஒரு காரணமுமில்லை. ஏதோ குற்ற மான நடவடிக்கை நிகழ்வதாகத் தெரிந்தாலன்றி நாம் அவ் வாறு செய்ய முடியாது. நான் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன். இதன் மேல் நாட்டம்வைத்துக்கொண் டிருப்பேன். மறக்கமாட்டேன். இன்னும் ஏதேனும் சொல்ப விஷயம் இதைப்பற்றி நேர்ந்தாலும் எனக்கு உடனே வந்து தெரிவி. இதில் நான் உனக்குப் பூரணமாய் உதவி செய்வே னென்று நம்பு" என்றான்.

அதன்மேல் வரதம்மாள் "நான் உன்னையே நம்பிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

2-வது அத்தியாயம்.

வரதம்மாள் சென்றபின் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, "நண்பனே! உண்மையாகவே இந்த விவ காரத்தில் சில கவனிக்கத்தக்க விஷயங்க ளிருக்கின்றன.

அவை ஒவ்வொரு மனிதருடைய விசேஷ குணத்தாலுண்டாகும் அற்ப விஷயங்களாகவிருக்கலாகும். அல்லது வெளியில் தோன்றுவதைக்காட்டிலும் மிக்க ஆழ்ந்த கருத்துடைய விஷயங்களடங்கியதாகவிருக்கலாம். ஆழ்ந்து சிந்திப்போர்க்குமுதலாவதாகத் தோன்றுவது எது தெரியுமா? இப்போது அங்கு வசிக்கும் மனிதன் முதலில் வந்து வீட்டை வாடகைக்கு எடுத்த மனிதனுயிராமல் அடியோடு வேறு ஆளாகவிருப்பான் என்பதே" என்முன்.

விசுவ:—ஏன் நீ யப்படி நினைக்கிறாய்?

ஆனந்த:—கூறுகிறேன். இந்தச் சுருட்டுத்துண்டு ஒரு பக்கமிருக்கட்டும். அவன் அங்கு வந்தபின் ஒரேயொரு முறைதான் வெளியில் சென்றிருக்கிறான். அதுவும் அறைகளை வாடகைக்கு ஏற்பாடு செய்துகொண்டு தன்னுடைய அதிசயமான நிபந்தனைகளை யெல்லாம் கூறிவிட்டு உடனே வெளியில் சென்றிருக்கிறான். சென்றவன் பிறகு வீட்டிலுள்ளோர் படுக்கைக்குச் சென்றபின், அதாவது திரும்பி வரும்போது வருகிறவனை யொருவரும் பார்க்காதவண்ணம், திரும்பிவந்திருக்கிறான். அவனே வேறொருவனே வந்தான். இதுவுமன்றி வீட்டை வாடகைக்குப் பேசியவன் நமது பாஷையை நன்றாய்ப் பேசினான். இவனே தீக்குச்சி என்பதைக்கூட அச்செழுத்தால் எழுதுகிறான். அதையும் தவராக எழுதுகிறான். அவன் எதுவோ ஒரு அகராதியைப் பார்த்தே எழுதியவன் என்று நான் உத்தேசிக்கிறேன். இவ்வாறு செய்வது அவனுக்கு நமது பாஷை தெரியாதென்பதை மறைக்கவே. ஆம். ஆள் மாறியிருக்கிறார்கள் என்று கருதப் போதுமான காரணங்களிருக்கின்றன.

விசுவ:—என்னத்திற்காக இப்படிச் செய்யவேண்டும்?

ஆனந்த:—"ஆ! அதுதான் இப்போது நாம் கண்டறிய வேண்டியது. இதை யாராச்சிசெய்ய ஒரு மார்க்கமிருக்கிறது" என்று கூறிக்கொண்டே ஒரு பெரிய புத்தகத்தை யெடுத்தான். அந்தப் புத்தகத்தில் பிரதிதினம் பத்திரிகைகளில் வரும் சில முக்கியமான விஷயங்களை யெல்லாம் கத்தரித்து சேகாம் செய்துவைத்திருக்கிறுன்.

அப்புத்தகத்தைத் திறந்து கொண்டே, "விசுவநாதம்! யாரேனும் ஒருவரும் தன்னைப் பாராவண்ணம் ஒளிந்துக் கொண்டிருக்க நேர்ந்தால் அப்படிப்பட்டவனுக்கு அவனைச் சேர்ந்தவர்கள் ஏதேனும் சமாசார மறிவிக்க வேண்டுமாயின் என்ன செய்வது? அவனும் வெளி விஷயங்களை யெப்படியறிவது? இதற்கெல்லாம் ஒரே மார்க்கந்தான் - அதாவது நமது நித்தியப் பத்திரிகை யென்னும் தினவர்த்மானியின் மூலமாகத்தான் தெரிவிப்பது. வரதம்மாள் வீட்டில் வந்திருப்பவனும் அப்பத்திரிகையையே தினம் பார்க்கிறுன். அதை விட்டால் வேறு வழியில்லை. ஆகையால் நாம் மற்றப் பத்திரிகைகளைக் கவனிக்கவேண்டிய அவசியமேயில்லை. இதோ அப்பத்திரிகையின் கடந்த இரண்டுவார விஷயங்கள் கிரமமாய்இதில் ஒட்டப்பட்டிருக்கின்றன" என்று அவற்றிலுள்ள விஷயங்களை ஒவ்வொன்றுய் வாசிக்கத் தொடங்கினுன்.

"கறுப்புடை யணிந்த மாது வீணுய்க் கலக்கப்படவேண்டாம்...." இது நமது ஆசாமிக்குச் சம்பந்தப்பட்டதல்ல. "சங்கரன் இன்னும் தன் தாயார் மனம் வருந்தச்செய்யலாகாது" இவையெல்லாம் நமக்குச் சம்பந்தப்பட்டவையல்ல என்று அவ்வாறே ஒவ்வொன்றுகக் கழித்துக்கொண்டே போய், "ஆ இது 'க' என்ற பத்தியில் - இது வரதம்மாள் வீட்டில் அவன் வந்த இரண்டாவது நாள் பிரசுரிக்கப்பட்டது. இதைப் பார் "பொறுமையாயிரு. சமாசாரப்போக்கு

வரவுக்கு நிச்சயமான ஒரு வழி கண்டுபிடிக்கிறேன். இடையில் 'க' என்ற இப்பத்தி". இது பொருத்தமாயிருக்கிறதல்லவா. ஆம். அவனுக்கு நமது பாஷையில் எழுதத் தெரியாவிட்டாலும் படிக்கத்தெரியும். இன்னும் பின்னல் பார்ப்போம்....ஆ - இதோ தொடர்ச்சி 'க' என்ற குறிப்பே இது மூன்று நாட்கள் கழித்து "நான் அனுகூலமான ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறேன். பொறுமையும் புத்திசாலித்தனமும் இருக்கவேண்டும். துன்பம் நீங்கிவிடும். 'க' பிறகு ஒருவாரமட்டும் ஒரு சங்கதியுமில்லை. பிறகு இதோ சற்று தீர்மானமான சங்கதி "மார்க்கம் துலங்கிக்கொண்டிருக்கிறது. முக்கிய சமாசாரமனுப்பச் சந்தர்ப்பம் வாய்ந்தால் இரகசிய பாஷைக்குறிப்பு அ-1, ஆ-2....இப்படியே நினைவிலிருக்கட்டும். சீக்கிரம் சமாசாரம் வரும். 'க' இது நேற்றிய பத்திரிகையில் இருந்தது. இன்று பத்திரிகையில் ஒன்றுமில்லை. இச்சங்கதிகள் யாவும் நமது ஆசாமிக்குப் பொருத்தமாக விருக்கிறது. விசுவநாதம்! நாம் மட்டும் இன்னும் கொஞ்சம் பொறுமையோட்டிருந்தால் இவ்விஷயம் நன்ருய் விளங்கிவிடுமென்பதிற் சந்தேகமேயில்லை" என்ருன்.

அது அவ்வாறே முடிந்தது. எவ்வாறெனில் மறு நாள் காலை ஆனந்தலிங் தீக்குழியோரத்தின் நின்றுகொண்டிருந்தவன் தனக்குத்தானே திருப்தியோடு புன்னகை புரிந்தான். அவன் சட்டென்று திரும்பி விசுவநாதனை நோக்கி "இதென்ன என்று மேஜைமேலிருந்த பத்திரிகையைக் கையிலெடுத்துக்கொண்டு இதோ பார் "உயர்ந்த சிகப்பு வீடு. முன்பக்கம் வெள்ளைக்கல். மூன்ருவது மாடி இடதுபக்கம் இரண்டாவது சாளரம், இருட்டிற்குப்பின், 'க' இது—திடமா யிருக்கிறது. போஜனம் செய்துகொண்டபின் நாமிருவரும் உலவிக்கொண்டே சென்று வரதம்மாள் வீடு எப்படியிருக்கிறதென்று பார்ப்போம்" என்ருன்.

அச்சமயம் வீதியில் யாரோ கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. வேலைக்காரி சென்று கதவைத் திறந்தாள். இரண்டு நிமிடங்களில் வாதம்மாளே அறைக்குள் வந்தாள். அவள் அவசரத்தோடு துரிதமாக உள்ளே வந்ததையும் அவள் முகக்குறியையும் கண்ட ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என்று கருதினார்கள். ஆனந்தஸிங் அவளை நோக்கி, "என்ன அம்மா! ஏதாவது விசேஷம் சம்பவித்ததோ?" என்றான்.

வாதம்மாள் ஆத்திரத்தோடு "அய்யா! இது கட்டாயம் போலீஸாருக்கு அறிவிக்கவேண்டிய விஷயம். என்னால் இனி பொறுக்கமுடியாது. இம்மாதிரி வாடகை வராவிட்டால் போகிறது. அவன் மூட்டையைத் தூக்கிக்கொண்டு கிளம்பவேண்டியதே. நான் நேராக போலீஸ் ஸ்டேஷனுக்கே சென்றிருப்பேன். ஆனால் உம்மிடம் ஆலோசனை செய்யாமல் நாமே யொன்றும் செய்யலாகாதென்று கருதியே வந்தேன். என்னால் இன்னமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. கடைசியில் என் கணவருக்கே தீங்கு நேரும் போது—" என்றதே,

ஆனந்தஸிங் "என்ன என்ன? உன் கணவனுக்கா? என்ன சங்கதி?" என்றான்.

வரதம்மாள்:—"கூறுகிறேன். என்ன அக்கிரமம் அய்யா. என் கணவர் தொழிற்சாலையில் மேஸ்திரியாயிருக்கிறார். அவர் அங்கு வேலைசெய்யும் ஆட்களெல்லாம் வருமுன் சென்றிருக்கவேண்டும். இன்று காலை அவர் சுமார் ஏழு மணிக்கு முன்பே வீட்டைவிட்டுப் புறப்பட்டு வீதியில் சுமார் பத்துகஜதூரம் செல்வதற்குள் யாரோ இரண்டுபேர் திடீலென்று அவர்மேல் பாய்ந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஒரு துணியை முகத்தின்

மேல் போட்டுச் சத்தமிடாதபடி கட்டி வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு சென்றார்கள். வண்டி சுமார் ஒரு மணி நேரம் சென்றபின் நிர்ச்சந்தடியான விடத்தில் தட்டென்று நிறுத்தப்பட்டதும் கதவைத் திறந்து அவரை வெளியில் தள்ளிவிட்டுப் போய் விட்டார்கள். அவர் அலுப்பாலும் திகிலாலும் மிக்க கலவரமடைந்து சற்று சமாளித்துக்கொண்டு எழுந்து பார்ப்பதற்குள் வண்டி மறைந்து விட்டது. தான் எங்கிருக்கிறதென்று பார்த்தால் அம்பாபுரம் செல்லும் பாதையிலுள்ள வெளி யிடத்தில் இருக்கக்கண்டார். பிறகு மெதுவாகக் கொஞ்சதூரம் நடந்து ஒரு வண்டியிலேறி யிப்போதுதான் வீடுவந்து சேர்ந்தார். அவரை மஞ்சத்தில் படுக்கவைத்துவிட்டு நான் ஓடிவந்தேன்" என்றாள்.

ஆனந்த:—இது மிக்க அதிசயமான சங்கதியே. உனது கணவன் அம்மனிதர்களின் உருவங்களைப் பார்த்தாரா? அவர்கள் சம்பாஷணையைக் கேட்டாரா?

வரதம்மாள்:—இல்லை. திப்பிரமை யடைந்துவிட்டார். தடாலென்று வண்டியில் தூக்கிப்போடப்பட்டதும், தடாலென்று கீழே தள்ளப்பட்டதுந்தான் அவருக்குத் தெரிந்ததாம். எல்லாம் மந்திரம் போல் தோன்றியது என்றார். ஆனால் வண்டியில் குறைந்தது இரண்டுபேர் இருந்ததாகவும் மூன்று போராகக்கூட இருக்கலாமென்றும் கூறுகிறார்.

ஆனந்த:—அப்படியாயின் இச்சம்பவத்திற்கும் உன் வீட்டில் வந்திருப்பவன் விவகாரத்திற்கும் சம்பந்தமிருக்கிறதென்றே கருதுகிறாயோ?

வரதம்மாள்:—"நாங்கள் பதினைந்து வருவடங்களுக் கதிகமாக அங்கு வசிக்கிறோம். இத்தகைய சம்பவம் ஒருபோதும்

நேர்ந்ததில்லை. இவனால் எனக்குப் போதுமென்றாய் விட்டது. பணமே யெல்லாவற்றிலும் பிரதானமல்ல. இன்று பொழுதமர்வதன்முன் அவனை வீட்டை விட்டுக் கிளப்பி விட்டால்தான் நான் நிம்மதி யடைவேன். ஏனெனில் பணத்திற்குப் பார்த்துக் கடைசியில் என் புருடனையே பறிகொடுத்ததாக நேர்ந்துவிடும்” என்றாள்.

ஆனந்த:—“அம்மா! கொஞ்சம் பொறு. எதையும் அவசரப்பட்டுச்செய்யலாகாது. இந்தவிவகாரம் முதலில் வெளிக்குத் தோன்றியதைவிட மிக்க விசேஷமானதாகவேயிருக்கிறதென்று நான் கருதுகிறேன். உன் வீட்டில் குடியிருக்கும் ஆளுக்கு ஏதோ துன்பம் நேரிடும் போல் தெரிகிறது. மேலும் அவன் எதிரிகள் அவனுக்காக உன் வீட்டினருகில் காத்துக்கொண்டிருந்தார்கள். காலையில் பனியினிருளில் அவனுக்குப்பதிலாகத் தவறாய் உன் கணவனைப் பிடித்துக் கொண்டு போனார்கள். பிறகு தாங்கள் தவறான ஆளைப் பிடித்துவந்ததாகத் தெரிந்ததே இவரை விட்டு விட்டார்கள். அவர்களிடம் சிக்கியது சரியான ஆளாகவே யிருந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ அதை நாமே யூகித்துக் கொள்ளவேண்டியதே” என்றான்.

வரதம்மாள்:—சரி, இப்போது என்னை யென்ன செய்யச் சொல்கிறீர்கள்?

ஆனந்த:—உன் வீட்டில் வந்திருக்கும் ஆளைப்பார்க்கவேண்டுமென்பதே எனது முதல் ஆவலாக விருக்கிறது.

வரதம்மாள்:—நீங்கள் கதவை யுடைத்துச் சென்றாலன்றி யது எப்படி முடியுமென்று எனக்குப் புலப்படவில்லை. ஆனால் ஒன்று; நான் ஆகாரங்களைக் கொண்டு போய் நாற்காலியில் வைத்துவிட்டுத் திரும்பிப் படிகளிலிறங்கி

வரும்போது அவன் தன் கதவைத்திறந்து வெளிவரும் சத்தத்தைக் கேட்டிருக்கிறேன்.

ஆனந்த:—ஆம். அவன் வெளியில் வந்து தான் ஆகாரங்களை யுள்ளே எடுத்துச் செல்ல வேண்டும். அச்சமையத்தில் நாங்கள் எங்கேனும் ஒளிந்திருந்து அவனைக் காண முடியாதோ?

வரதம்மாள் சற்று நேரம் சிந்தித்தபின், "ஆம் பார்க்க வழியிருக்கிறது. அவன் ஆகாரங்கள் வைக்கப்படும் நாற்காலிக்கு நேராக எதிரில் ஒரு சிறு அறையிருக்கிறது. நீங்கள் அதில் மறைந்திருந்து பார்த்தால் பார்க்கலாகும்." என்றாள்.

ஆனந்தஸிங் "இது மிக்க நேர்த்தியான ஏற்பாடு. அவன் எப்போது மத்தியான போசனம் அருந்துகிறான்?" என்றான்.

வரதம்மாள் சரியாகப் பகல் ஒரு மணிக்கு என்றாள். ஆனந்தஸிங் "சரி அச்சமயத்தில் நானும் என் நண்பரும் அந்த எதிர் அறையில் மறைந்திருக்கும்படி நீயேற்பாடு செய்து விடு" என்றான்.

வரதம்மாள்:—"சரி நான் அவ்வாறே செய்கிறேன். நீங்கள் கொஞ்சம் முன்னாடியே வந்து விடுங்கள்" என்றாள். பிறகு இரண்டு மூன்று நிமிடங்கள் வரையில் மூவரும் கலந்து ஆலோசித்தபின் வரதம்மாள் மனநிம்மதியோடு தன் வீட்டிற்குச் சென்றாள்.

சரியாகப் பனிரண்டரைமணிக்கு ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் வரதம்மாள் வீட்டிற்குச் சென்றார்கள். அந்த வீடு உயரமான வீடே. அது நகரப் பொருட் காட்சிக் கட்டிடத்தின் பக்கத்துவீதியிலிருக்கிறது. அவ்வீடு வீதியின் மூலையிலிருப்பதால் பக்கத்திலுள்ள மாடிவீதியின் வீடுகளைத்தும் நன்றாய் புலப்படுகின்றன. அவ்வீதி நாணயமான

வீடுகளிருக்கும் வீதியெனப் பிரசித்திபெற்றது. ஆனந்தலிங் அவ்வீதியிலுள்ள வீடுகளை யுற்று நோக்கியதும் சந்தோ ஷத்தோடு அங்கிருந்த வீடுகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டி "அதோ பார் விசுவநாதம்! உயரமான சிகப்பு வீடு. முன் பக்கம் வெள்ளைக்கற்கள். அதுதான் சமிக்கைகாட்டும் இடம். சந்தேகமேயில்லை. இடமும் நமக்குத் தெரிந்திருக்கிறது இரகசிய பாஷையின் குறிப்பும் நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே உண்மையில் நமது வேலை சுலபமாக முடியும். அந்த வீட்டின் சாளரத்தின்மேல் "வாடகைக்கு அறைகள் விடப் படும் என்று விளம்பரம் தொங்குகிறது பார். அது காலி வீடே இவனுக் குடந்தையாயிருப்பவன் அதில் நடமாடு கிறான்" என்றான்.

அதற்குள் வரதம்மாள் வந்து அவர்களைச் சந்தித்தாள். ஆனந்தலிங் "ஏனம்மா! என்ன சங்கதி?" என்றான்.

வரதம்மாள் "நான் எல்லாம் ஆயத்தமாய் வைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இருவரும் உங்கள் பாதரட்சை களை விட்டு விட்டு என்கூட வாருங்கள். உங்களை யந்த விடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன்" என்றாள்.

வரதம்மாள் ஏற்பாடு செய்தது ஒரு கோர்த்தியான இடம். இவர்கள் இந்த அறையில் மறைந்துகொண்டிருந் தால், இவர்கள் இருளில் இருந்தாலும் அம்மாது தந்திர மாய் அங்கு வைத்திருக்கும் ஒரு நிலைக்கண்ணாடியில் வீட் டில் வந்திருப்பவன் தன் அறையிலிருந்து வெளிவந்து சாப் பாட்டை யெடுத்துக்கொண்டு போகையில் அந்த ஆளின் உருவத்தைக் காணலாகும்.

இரண்டொரு நிமிடங்களில் வரதம்மாள் இவர்கள் இரு வரையும் அழைத்துச்சென்று அந்த அறையில் விட்டுவிட் டுக் கதவை மூடிக்கொண்டு சென்றாள். ஆனந்தலிங்கும் விசுவநாதனும் சந்தடி செய்யாமல் அவலோடு ஏதாவது

சந்தடி யுண்டாகிறதாவென்று கவனித்துக்கொண்டும் நிலைக் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு மிருந்தார்கள்.

இரண்டொரு நிமிடங்களில் எதிர் அறைகளிருந்து மணியடிக்கும் சத்தம் கேட்டது. உடனே இருவரும் எச்சரிக்கை யடைந்தார்கள். ஏனெனில் அங்கிருக்கும் ஆள் சாப்பாடு கொண்டுவரச்சொல்கிறபடியால் வாதம்மாள் சாப்பாட்டைக் கொண்டுவந்து வைப்பாள். உள்ளிருக்கும் ஆள் அதை யெடுத்துப்போக வெளியில் வருவான் என்று தெரிந்துகொண்டார்கள்.

அவ்வாறே இரண்டொரு நிமிடங்களில் வாதம்மாள் ஆகாரத்தட்டைக் கொண்டுவந்து மூடியிருக்கும் கதவினெதிரிலுள்ள நாற்காலியில் வைத்துவிட்டுச் சென்றாள். ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் நிலைக்கண்ணாடியை யுற்று நோக்கிக்கொண்டே யிருந்தார்கள். வாதம்மாளின் காலடிச் சத்தம் மறைந்ததும் அறையின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. மறு நிமிடம் இரண்டு மெலிந்த கரங்கள் ஆகாரத்தை யெடுத்துக்கொண்டன. கதவு உடனே மூடப்பட்டது. அழகான ஆனால் பீதி நிறைந்த ஒரு மாதின் வதனத்தை யிருவரும் பார்த்தார்கள். அம்முகம் பீதியோடு எதிரில் கொஞ்சம் திறந்திருக்கும் இவர்களிருக்கும் அறையின் கதவை யுற்று நோக்கியதையிவர்கள் கண்டார்கள். ஆனந்தஸிங் விசுவநாதன் காத்தைப்பற்றிச் சீண்டினான். உடனே இருவரும் மாடியைவிட்டுக் கீழிறங்கி விட்டார்கள்.

கீழே வாதம்மாள் மிக்க ஆவலோடு இவர்கள் வரவிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஆனந்தஸிங் அவளை நோக்கி "அம்மா நீ சற்று பொறுமையாயிரு. அவசரப்படாதே. என்னைக்கேட்காமல் ஒன்றும் செய்யாதே. இனி யுனக்காவது உன் கணவருக்காவது எள்ளளவு தீங்கும் நேராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். இதில் பெரிய

விசேஷமிருக்கிறது. நான் மறுபடியும் மாலையில்வருகிறேன்” என்று கூறிவிட்டு விசுவநாதனிடம் குசுகுசு வென்று “இதைப்பற்றிய விவகாரங்களை நாம் நமது வீட்டிற்குச் சென்றபின்தான் பேசவேண்டும். காரணம் பின்னல் உனக்கு விளங்கும்” என்றான்.

வரதம்மாள் “எப்படியாயினும் போகட்டும், என் கணவருக்கு மறுபடி தொந்திரை யுண்டாகாதிருந்தால் போதும்” என்றாள். ஆனந்தலிங் அப்படி யொன்றுமே நேராது என்று கூறியபின் அவனும் விசுவநாதனும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

186487

3-வது அத்தியாயம்.

ஆனந்தலிங்கும் விசுவநாதனும் வீடுபோய்சேர்ந்து அறையில் உட்கார்ந்தபின் ஆனந்தலிங் தன் நண்பனை நோக்கி “நண்பனே நமது உத்தேசம் உண்மையாகவே முடிந்தது. முதலில் வந்த ஆள் வேறு, இப்போது இருக்கும் ஆள் வேறு. ஆனல் ஆணுக்குப்பதில் பெண்ணாகவிருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அதிலும் விசுவநாதம்! சாதாரணமாதிரி ஸ்திரீயல்ல.

விசுவ:—அவள் நம்மைப் பார்த்துவிட் டிருப்பாளோ?

ஆனந்த:—கொஞ்சம் கலவரம் உண்டாகக்கூடிய அளவே கண்டிருப்பாள். அது வரையில் உண்மை. இப்போது பொதுவாய் நடக்கும் விவகாரம் இன்னதென்று தெரிகிறதல்லவா. இரண்டுபேர் உடனே நேரிடக்கூடிய ஏதோ பயங்கரமான ஆபத்துக்கஞ்சி ஒளிந்துகொண்டிருக்கிறார்கள், அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஜாக்கிரதையின் அளவால் அவர்களுடைய ஆபத்து எத்தகையதென்றுணரலாம். அந்த மனிதன் செய்யவேண்

டிய வேலையென்னமோ இருக்கிறது. அதற்காக இம் மாதை மிக்க பத்திரமான மறைவிடத்தில் வைத்திருக் கிறான். அது சுலபமான காரியமல்ல. ஆயினும் அவன் மிக்க சாமார்த்தியமாய் அவளுக்குத்தினம் ஆகாரம் அளிக்கும் ஸ்திரீகூட அவளைக்காண வொட் டாத விதமாய் ஏற்பாடு செய்துவிட்டான். அச்செழுத் தில் எழுதுவதன் காரணம் இப்போது விளங்கிவிட் டது. தான் ஒரு ஸ்திரீயென்பது தெரிந்து விடாம லிருப்பதற்காகவே அவ்வாறு செய்யப்படுகிறது. அவன் இவளிடம் வந்து போகலாகாது. ஏனெனில் அவனுடைய எதிரிகளுக்கு இவனே வழிகாட்டிய மாதிரியாய் விடும். அவன் நேரில் வரக்கூடாதபடியால் தான் அப்பத்திரிகை மூலமாய்ச் சாமாசாரம் அனுப் பிக்கொண் டிருக்கிறான். இதுவரையில் நன்றாய் விளங்குகிறது.

விசுவ:—சரிதான். இவற்றின் மூலத்தில் என்ன விருக் கிறது?

ஆனந்த:—ஆம் அதேயிருக்கிற விஷயம். இவற்றிற்கெல் லாம் மூலகாரணமாக விருப்பதுதான் என்ன? வாதம் மாள் கூறியவிஷயம் இதில் ஏதோ பிரமாதம் இருப்ப தாகக்காட்டுகிறது. ஒன்றுமட்டும் கூறலாம். இது ஒரு சாதாரண காதல் விஷயமல்ல. அம்மாதின் முகத்தில் அபாயத்தின் குறியிருக்கிறதைக் கண்டாயல்லவா? வீட்டுக்காரனுக்கு நடந்த விவகாரம் வீட்டில் குடி யிருப்பவனுக்காகக் கருதப்பட்டதேயன்றி வீட்டுக்கார னுக்கல்ல. இவர்களுக் குண்டாயிருக்கும் பீதியாலும், அத்தியந்த இரகசியத்தின் அவசியத்தாலும் உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடிய விஷயம் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறதென்று தெரிகிறது. இன்னொரு விஷயம்-

எதிரிகள் - அவர்கள் யாராயினும் இருக்கட்டும் - அம் மனிதன் இந்த வீட்டில் வசிக்க ஏற்பாடு செய்திருக்கிறான் என்று எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆள் மாற்றப்பட்டிருப்பது அவர்களுக்குத் தெரியாது. பெரும்பாலும் அவன் முதலில் வீடமர்த்த அவ்வீட்டிற்குள் நுழைந்த போது தொடர்ந்து வந்து பார்த்திருப்பார்கள். பிறகு அவன் வெளியில் சென்றதையும் இரவில் வேறு ஆள் உள்ளே சென்றதையும் அவர்கள் காணவில்லை. இது மிக்க சிக்கலான விஷயம்.

விசுவ:—நீ இதற்குமேல் ஏன் இதில் பிரவேசிக்கவேண்டும்? இதனால் உனக்கென்ன இலாபம்?

ஆனந்தஸிங் வியப்போடு "பேஷ்! என்ன இலாபமென்று கேட்கிறாய்? சூக்கும அறிவை யுபயோகித்து இதை யாராய்ச்சி செய்து ஜெயமடைவதாலுண்டாகும் சந்தோஷமும் கூடுமானால் ஒருவர் ஆபத்தை நீக்கி அவர்களுக்கு நன்மை புரிவதுமே பெரிய இலாபமல்லவோ. நீ சிகிச்சை செய்யும்போது காசில்லாமலே நாம் புது விஷயங்களை யறிந்துகொள்கிறோம் என்ற உணர்ச்சி உனக்குள் உதிக்கவில்லையோ?" என்றான்.

விசுவநாதன் "அது நான் தேர்ச்சியடைவதற்காக" என்றான். ஆனந்தஸிங் "தேர்ச்சி யடைவதற்கு முடிவுகூடவிருக்கிறதோ? நான் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டேன். இனி கற்கவேண்டிய தொன்றுமில்லை" என்று எவரேனும் சொல்லக்கூடுமோ - இரவு வந்ததே நாம் நமது ஆராய்ச்சியில் இன்னும் ஒருபடி யதிகம் செல்வோம்.

இருவரும் பொழுதமர்ந்ததும் வரதம்மாள் வீட்டை நோக்கிச் சென்றார்கள். ஆங்காங்கு வீடுகளின் சாளரங்களில் தெரியும் சதாமான வெளிச்சமும் வீதியிலுள்ள தீபங்

களின் வெளிச்சமும் தவிர எங்கும் ஏகமாய் ஒரே கறுப்புத் திரை விட்டதுபோலிருந்தது இருவரும் வரதம்மாள் வீட்டின் மாடியில் ஒரு அறையில் உட்கார்ந்து சாளரத்தின் வழியாய்ப் பக்கத்து வீதியில் முன்பு பார்த்த உயரமான சிகப்பு வீட்டை நோக்கினார்கள். அதன் மேல்மாடியில் ஒரு அறையின் சாளரத்தில் தீபவொளி தெரிந்தது. ஆனந்தஸிங் அதை யுற்று நோக்கியபின் தன் நண்பனிடம் குசுகுசு வென்று "அந்த அறையில் ஒரு ஆள் உலவிக்கொண்டிருப்பது தெரிகிறது" என்றான்.

விசுவ:—ஆம். அவன் நிழலே நான் காண்கிறேன். அவன் மறுபடி யதோ அங்கிருக்கிறான். அவன் கையில் ஒரு தீபம் வைத்துக்கொண்டிருக்கிறான். அவள் தன்னைப் பார்க்கிறாளாவென்று அவன் கவனிக்கிறான்.

ஆனந்த:—"அதோ இராந்தலில் சமிக்கை காட்டுகிறான். அதன்மூலமாக வரும் எழுத்துக்களைக் குறித்துக் கொள். பிறகு நாம் ஒத்திட்டுப் பார்த்துக்கொள்ளலாம். அதோ சமிக்கை. "அது 'ச'—" என்றான்.

அதன்படியே அவன் விளக்கை யசைத்துக்காட்டும் சமிக்கையி லுண்டாகும் எழுத்துக்களை குறித்துக்கொண்டே வந்தார்கள். அது கடைசியில் "சரியாகப் பத்துமணிக்கு தி. க" என்று இருந்தது. இதே சமிக்கை இரண்டொரு முறை கொடுக்கப்பட்டது. ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து "இதென்ன? இன்னும் எத்தனைமுறை யிதையே கூறுவான். ஆ! தட்டென்று நிறுத்திவிட்டான்'' என்றான்.

அச்சமயம் அவ்வீட்டிலிருப்பவன் தீபத்தால் சமாசாரம் அனுப்புவதை நிறுத்திவிட்டான். இரண்டொரு விநாடிகளுக்குள் மறுபடி தீபவொளி அச்சாளரத்தில் காட்டப்பட்டது. மறுபடி சமிக்கையாய் எழுத்துகள் கூறப்பட்டன. அவ்வார்த்தையை யறிந்ததே ஆனந்தஸிங் "ஓகோ

இவர் இடவிதேசத்தார் "இப்போது கூறப்பட்டவார்த்தையின் அர்த்தம் "நெருங்கிய ஆபத்து" என்பதே என்முன். அதோடு அதில் ஒரு எழுத்திற்கே "பத்திரம்! பத்திரம்!!" என்ற அர்த்தம் இருக்கிறது." என்முன்.

விசுவநாதன் "நீயறிந்துகொண்டாய்போல் தெரிகிறது" என்முன்.

ஆனந்த:—சந்தேகமென்ன? இது மிக்க அவசர சமாசாரமானதால் மூன்றுமுறை கூறப்பட்டது. கொஞ்சம் பொறு. அதோ அவன் மறுபடி சாளரத்தினருகில் வருகிறுன்" என்முன்.

மறுபடி யொருமனிதன் சாளரத்தினருகில் பதுங்கிக்கொண்டு வந்தான். மறுநிமிடம் இராந்தல் ஒளியில் சமாசாரம் அனுப்பப்பட்டது. அது மிகத் துரிதமாய் ஆத்திரத்தோ டனுப்பப்பட்டதால் இவர்கள் தெரிந்துகொள்வதற்குக் கஷ்டமாகவே யிருந்தது. ஆனந்தஸிங் "ஆ! இதென்ன அர்த்தம். ஆபத்தின் குறி. ஆம் ஆம். மறுபடி மறுபடியும் அதே. ஓகோ இதென்ன? பாதிவார்த்தையில் தட்டென்று நிறுத்திவிட்டானே?" என்று திகைத்தான்.

அந்த அறையிலிருந்த மனிதன் உடனே மறைந்துவிட்டான். அங்கு இருள் சூழ்ந்துவிட்டது. ஆனந்தஸிங் "இக்கடைசி எச்சரிக்கை யெப்படி பாதியில் தடுக்கப்பட்டுவிட்டது? யாரால் தடுக்கப்பட்டது." என்று சிந்தித்துத் துள்ளியெழுந்தான். விசுவநாதனுக்கும் அதே யோசனை யுதித்தது.

ஆனந்தஸிங் "விசுவநாதம்! இதில் ஏதோ விபரீதம் இருக்கிறது. பெரிய பயங்கரமான விவகாரம் ஏதோ நிகழ்கிறது. அத்தகைய சமாசாரம் இடைபாதியில் தடைப்படுவானேன். துப்பறியும் இலாகாவிற்குத் தெரிவிக்கலாமா

வென்று கருதுகிறேன். ஆயினும் இச்சமயம் நாம் இதை விட்டுச் செல்லக்கூடியதாயில்லை.'' என்றான்.

விசுவ:—''நான் போலீஸ் தலைவரிடம் போய்ச் சங்கதியை யறிவிக்கட்டுமா?'' என்றான்.

ஆனந்தஸிங் ''நாம் இதைப்பற்றிய இன்னும் சில விவரங்களை நன்கறிந்துகொள்ளவேண்டும். ஒருசமயம் இது குற்றமற்ற சங்கதியாய் விளங்கிவிட்டாலும் விளங்கிவிடலாம். எதற்கும் நாமே நேரே அந்தவிடத்தைப் பார்வையிடுவோம் வா!'' என்றான்.

இருவரும் உடனே புறப்பட்டு அந்த வீடிருக்கும் வீதிக்குச் சென்றார்கள். போய்க்கொண்டேயிருக்கையில் விசுவநாதன் தாங்கள் விட்டுவந்த வீட்டைத் திரும்பிப் பார்த்தான். ஒருசாளரத்தில் ஒரு ஸ்திரீ மிக்க கலவரத்தோடும் ஆவலோடும் வெளியில் தலையைநீட்டி சமாசாரம் அனுப்பப்பட்ட சாளரத்தைப் பார்த்தப்படி யிருக்கிறாள்.

இவர்களிருவரும் அம்மனிதன் சமாசாரம் அனுப்பிய வீட்டின் அருகிற் சென்றபோது, அவ்வீட்டின் எதிரில் ஒரு மனிதன் நின்றிருந்தான். அவன் ஒரு நெடுஞ்சட்டை யணிந்து கொண்டிருந்தான். வீதியிலுள்ள இராந்தல் வெளிச்சத்தில் அவன் ஆனந்தஸிங் முகத்தைப் பார்த்து விட்டதும் ஆவலோடு ஓடிவந்து ''ஆ! ஆனந்தஸிங்!'' என்றான். கங்காதரம்பிள்ளை யென்பவன் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர். கங்காதரன் ''நீ என் இங்கு வந்திருக்கிறாய்?'' என்றதே ஆனந்தஸிங் ''நீ என்ன காரணமாக வந்திருக்கிறாயோ அதே காரணமாகத்தான் நானும் வந்திருக்கிறேன்.'' என்றான்.

கங்காதரன்:—நீ இதிற் சம்பந்தப்பட்டாயென்பது எனக்குச் சற்றும் விளங்கவில்லை.

ஆனந்தஸிங் பல வழிகள் ஒரே இடத்தில் போய்ச்

சேருகின்றன. நான் சமீபத்தில் கவனித்துக் கொண்டிருந்தேன் என்றான்.

கங்கா:—என்ன? சமாசாரமா?

ஆனந்த:—ஆம். ஆம். அதோ அந்தச் சாளரத்திலிருந்து தீபக்குறியால் சமாசாரம் அனுப்பப்பட்டது. அது இடையில் நிறுத்தப்பட்டு போயிற்று. நாங்கள் காரணம் என்னவென்று பார்க்கவந்தோம். இப்போது நீ கவனிக்கிறவரையில் எனக்கென்ன இதில் வேலை. போய் வருகிறேன்.

கங்கா:—"கொஞ்சம் பொறு. நான் இதுகாறும் கண்ட விஷயங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் இதில் தான் நான் உன் உதவியைக் கோரவேண்டியது மிக்க அவசியமாக விருக்கிறது. இம்மாடிகளிலிருந்து வெளியில் வருவதற்கு ஒரேவழிதா னிருக்கிறது. ஆகையால் அவன் தப்பமுடியாது." என்று ஆவலோடு கூறினான்.

ஆனந்தஸிங் சற்று தூரத்தில் ஒரு வண்டியில் இருந்த சாரதியைச் சுட்டிக்காட்டி, "அதுயார்? என்றான். கங்காதரன் புன்னகையோடு "ஆ! ஆ! இம்முறை நீ தோற்றுவிட்டாய். ஒப்புக்கொள்ளவேண்டியதே. இதோ அவர் வருகிறார்பார்" என்று கூறிக்கொண்டே தன் கைக்கோலை மூன்றுமுறை பூமியில் தட்டினான். வண்டியிலிருந்த மனிதன் கையில் பிடித்த சாட்டியோடு இறங்கிவந்தான். அவன் இவர்கள் அருகில் வந்தபோது கங்காதரன் அவன் காதைப்பற்றி இதோ ஆனந்தஸிங் என்று கூறிவிட்டு ஆனந்தஸிங்கிடம் இவர்தான் மேற்குநாட்டில் பிரசித்திபெற்றவராகிய இரவணப்பர் என்றான்.

இரவணப்பன் மேற்குநாட்டில் பிரசித்திபெற்ற துப்பறிவன். அவன் "ஆனந்தஸிங்! உன்னை நேரில் காணப்

பாக்கியம் பெற்றதற்காக மிக்க சந்தோஷ மடைகிறேன்" என்றான்.

ஆனந்தஸிங் "நானடைந்ததே அதிக சந்தோஷம். நான் உம்மைக் காண்பதற்கு ஒரு பயணம் வரவே யிருந்தேன்" என்றான். இரவணப்பன் மிக்க சுறு சுறுப்பான மனிதன். தீக்ஷணியமான பார்வையும் புத்தி கூர்மையுமுடையவன். அவன் "ஆனந்தஸிங்! நான் இச்சமயம் என் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள இவ்வளவுதூரம் வர வேண்டி நேர்ந்தது. கோராக்கந்தன்மட்டும் அகப்பட்டுவிட்டால்." என்றான்.

அப்பெயரைக் கேட்டதே ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து "என்ன? என்ன? சிகப்புவட்டத்தில் சம்பந்தப்பட்ட கோராக்கந்தனா?" என்றான்.

இரவணப்பன் "அடடா! அவன் இவ்வளவுதூரம் பிரசித்திபெற்றுவிட்டனா! இவனைப்பற்றி அங்கு கேள்விப்பட்டோம். அவன் தலைமேல் ஐம்பது கொலைக்குற்றம் இருக்கிறது. ஆயினும் ஒன்றிற்காவது சரியான ருசு அகப்படவில்லை. நான் நவீனபுரியிலிருந்து அவன் சென்ற வழியைப் பிடித்துக்கொண்டே இந்த நகரத்திற்கு வந்தேன். இங்கு ஒருவாரம் அவனைவிடாமல் பின்பற்றிக்கொண்டே யிருந்தேன். ஏதாகிலும் ஒரு சாக்கு அகப்பட்டால் பிடித்துக் கொள்ளலாமென்று காத்திருந்தேன். நானும் கங்காதரமும் இந்தப் பெரியவீட்டிற்கு அவனைத் தொடர்ந்துவந்தோம். இங்கிருந்து வெளிசெல்ல இந்த ஒருவழிதானிருக்கிறது. ஆகையால் அவன் தப்பமுடியாது" அவன் இவ்வீட்டிற்குள் சென்றபின் மூன்றேபேர் இதிலிருந்து வெளிசென்றார்கள். அவர்களில் அவன் இல்லையென்று சத்தியம் செய்வேன்." என்றான்.

கங்காதரன் "ஆனந்தஸிங் இராந்தல் குறிகளால் சமா

சாரம் அனுப்பப்பட்டதைப்பற்றி கூறுகிறார். இவரைப்பற்றி எனக்குள்ள அனுபவத்தால் இந்த விஷயத்தைப்பற்றி அதிகமான சமாசாரம் இவருக்குத் தெரியுமென்றே நினைக்கிறேன்" என்றான்.

அதன்மேல் ஆனந்தஸிங் தனக்குத் தெரிந்திருக்கும் சங்கதியைச் சுருக்கமாகக் கூறினான். அதைக்கேட்ட இரவணப்பன் அடடா என்று காத்தைத் துடையின்மேல் தட்டி "அவன் நம்மையேமாற்றிவிட்டானென்று தோன்றுகிறது." என்றான்.

ஆனந்த:—ஏன் அப்படிக் கூறுகிறாய்?

இரவணப்பன்:—இதோ அவன் இங்கிருந்து தன் கூட்டாளியொருவனுக்குச் சமாசாரம் அனுப்பிக்கொண்டிருக்கிறான். அவன் கூட்டாளிகளில் பலர் இந்நகரிலிருக்கிறார்கள். நீ கூறியபடி அவன் ஆபத்து என்று தெரிவித்துக்கொண்டிருக்கிறான். உடனே தட்டென்று நிறுத்திவிட்டான். அவன் சாளரத்திலிருந்து நாங்கள் வந்ததைப் பார்த்துவிட் டிருக்கவேண்டும். அல்லது சமீபத்திலேயே ஆபத்து நெருங்கிவிட்டதென்று எவ்வாறோ தெரிந்துகொண் டிருக்கவேண்டும். ஆகையால் தப்பித்துக்கொள்ள வேண்டுமாயின் உடனே வேலை செய்யவேண்டுமென்று உணர்ந்துகொண்டிருப்பான். நீ என்னசெய்யலாம் என்கிறாய் ஆனந்தஸிங்!

ஆனந்தஸிங் "நாம் உடனே நேராகப் போய்ப் பார்ப்போம்" என்றான்.

இரவ:—ஆனால் அவனைப் பிடிக்க நம்மிடம் வாரண்டில்லையே.

கங்கா:—"அவன் இப்போது குடியில்லா வீட்டில் சந்தேக

மான நிலைமையிலிருக்கிருன். இச்சமயம் அவனைப் பிடிக்க இக்காரணம் போதும். நாம் அவனைப் பிடித்துக்கொண்டு நவீனபுரிக்குத் தெரிவித்தால் அங்கிருந்து காரணங்கள் கிடைக்குமல்லவா. இப்போது இவனைச் சிறைசெய்யும் பொருப்பை நானே யேற்றுக் கொள்கிறேன்" என்ருன்.

போலீஸ் இலாகாவிலிருக்கும் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் ஆனந்தஸிங்கைப்போல் அவ்வளவு தீக்ஷண்யமான புத்திசாமார்த்திய முடையவர்களா யிராவிட்டாலும் தைரியத்தில் மட்டும் குறைந்தவர்களல்ல. இப்போது இவர்கள் பிடிக்கக்கருதும் கோராக்கந்தன் என்பவன் கொலை பாதகத்திற்கஞ்சாத பெரிய போக்கிரி. இவன் பெயரைக் கேட்டாலே மேற்கு நாட்டில் யாவரும் நடுக்கங்கொள்வார்கள். கங்காதரன் அப்படிப்பட்டவனைப் பிடிக்கத் தீர்மானித்து அவ்வீட்டின் மூன்ருவது மாடிக்கு ஏறத் தொடங்கினன். அவன் முகத்தில் எள்ளளவு மாறுதலேனுமில்லை. சற்றும் கலக்கமாவது அச்சமாவது உண்டாகவில்லை. அவன் சாதாரணமாய்த் தன் காரியாலயத்திற்குச் செல்பவன் போல் படபட வென்று நிம்மதியான மனதோடு ஏறிச் சென்ருன்.

6487
மேற்கு நாட்டிலிருந்து வந்திருக்கும் துப்பறியும் ஆசாமியாகிய இரவணப்பன் பின்முறைக் கங்காதரனுக்கு முன்செல்ல முயன்ருன். ஆனால் கங்காதரன் தன் தோளால் அவனை முன்செல்ல விடாது தள்ளிக்கொண்டே சென்ருன். ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் பின்னல் சென்ருர்கள். கடைசியில் மூன்ருவது மாடியிற் சென்றபோது அங்கு வழி இரு புறங்களிலும் பிரிந்தது. இடது புறம் தாழ்வாரத்தின் பக்கம் செல்லும் கதவு திறக்கப்பட்டிருந்ததுகண்டு அவ் வழியே சென்ருர்கள்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

மாதவி ✻ ✻ ✻ ✻ மாதவன்

அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூ. 1—0—0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்க்கு 30-7-26 வரையில் அணா 12.

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமிமுதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப் படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 48 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
2-பாகமும்	... 4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்	... 3	0	பத்மாஸனி	... 0	14
கற்கோட்டை	... 2	0	வீரநாதன்	... 0	12
மின்சார மாயவன்	... 1	8	குணசுந்தரன்	... 0	12
தேவசுந்தரி	... 1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும்	... 3	8	கமலசேகரன்	... 1	12
சுவர்ணாம்பாள்	... 0	12	பூங்கோதை	... 0	10
ஆனந்தவிக்	.. 2	0	இந்திராபாய்	... 2	8
மதனபூஷணம்	... 1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும்	...10	0	லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.